THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE LAY PUBLIC

650

"வக்கீல்"

... REGISTRAR OF ...
23 NOV 1951
MADRAS

650
4.57.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

இந்த இதழில்

தேர்தல் சட்டங்கள்

தமிழ் ஜில்லாக்கள் தேர்தல் தொகுதி விபரங்கள்

கிராம உத்தியோகஸ்தர்கள் மறைவார்களா?

வார்சு வரி

பொல்லாத மரங்கள்

வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி - பதில்

கண்ட்ரோல்

விபரம் உள்ளே பார்க்கவும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS
TIRUVADAMARUDUR P.O.
Date ....
TIRUBUVANAM.

THE "VAKIL" ~ செப்டம்பர் 1951 ~ 4 அணா

நாகரீக நூதன பார்டர்களில
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரு
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கையை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குபாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B:-(1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவு (3) V. P. கிடையாது. (4) அதர்பர்சனு நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் PO S. A. Dt.

"சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K. R. அப்பாச்சாரியார் M.A., L.T., வைஸ் பிரின்ஸிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

'உங்கள் பலன்கள் பூர்த்திலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7—8—0.
வி. பி. பி. தனி.
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:-வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம்,

விருத்தாசலம் P.O. (S. I.)

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு
★
மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
★
வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

★

சிறந்த லித்தோ
அச்சு வேலைகளுக்கு
★
ஹோ & கோ

5, ஸ்டிரிங்கர்தெரு, :: மதராஸ்- 1.

187711
சென்னை-600 008

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உ[illegible]ர்தர மாத
சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா	ரூ. 3—0—0
விசேஷ வருட சந்தா	ரூ. 6—0—0
ஷி. வெளிநாடு	ரூ. 10—0—0
ஆயுள் சந்தா	ரூ. 100—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்ட வேண்டியதில்லை. அவர்களுக்கு "வக்கீல்" இதழ்களும், வருட முடிவில் சேர்த்து பைண்டு செய்யப்பொருள் அட்டவணையும், "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரம் செய்யப்படும் எல்லாப் புத்தகங்களும் அவ்வப்பொழுது அனுப்பிக்கொண்டு வரப்படும். "வக்கீல்" பத்திரிகையின் சந்தா இனி உயர்த்தப்பட்டாலும், அல்லது "வக்கீல்" மாதம் இருமுறை அல்லது வாரப் பத்திரிகையாகச் செய்யப்பட்டாலும், ஆயுள் சந்தாதார்கள் புதிய கட்டணம் கட்டவேண்டியதில்லை. ஆயுள் சந்தாதாரர்களாகச் சேரவிரும்பும் அன்பர்கள் அது சம்பந்தமான விவரங்களையும் அவர்களுக்குள்ள மற்ற சலுகைகளையும் தெரிந்துகொள்ள நேரில் "வக்கீல்" காரியாலயத்திற்கு எழுதவும்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 செப்டம்பர் 1951 இதழ் 9

பொருள் அடக்கம்

பக்கம்

குறிப்புகளும் - செய்திகளும்	
தேர்தல் திருவிழா	3
காங்கிரஸ்	3
வார்சு வரி	4
புதிய சட்டங்கள்	
சென்னை ஜமீன் - இனம் ஒழிப்புச் சட்டத் திருத்தம்	5
உலையில்	7
சென்னைநிலச் சீர்திருத்தக் கமிட்டியின் மற்ற சிபார்சுகள்	
தேர்தல் (எலெக்ஷன்) சம்பந்தமான சட்டங்கள்	9
தமிழ் ஜில்லாக்களின் பார்லிமெண்ட் தொகுதிகள்	10
தமிழ் ஜில்லாக்களின் சென்னை அசெம்பிளி தொகுதிகள்	12
வழக்கும் - தீர்ப்பும்	17
பொல்லாத மரங்கள்	
பஞ்சாயத்தார்கள் குற்றவாளிகளா?	19
கேள்வி - பதில்	21
கண்ட்ரோல்	23

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 செப்டம்பர் 1951 இதழ் 9

குறிப்புகளும் - செய்திகளும்

தேர்தல் திருவிழா. பாரத நாட்டு மக்கள் என்றும் கண்டிராத ஓர் பெரிய திருவிழா இன்னும் நான்கு மாதங்களில் நடக்கப் போகின்றது. இருபத்தொரு வயது பூர்த்தியான கோடிக் கணக்கான ஆண் பெண் மக்கள் அனைவரும் இதில் நேரடியாகக் கலந்து கொள்ள உரிமை உண்டு. அதுதான் 1952 ஜனவரி முதல் வாரத்தில் நடக்கப்போகும் நமது மகத்தான பொதுத் தேர்தல். ஜனநாயக ஆட்சிமுறை உண்மையாக நடைபெறும் எல்லா நாடுகளிலும் இதுபோன்றது ஒரு பெரிய சம்பவமேயாகும். அடுத்த ஐந்து வருடங்களுக்கு இந்நாட்டின் அரசாங்கத்தை யார் கையில் ஒப்புவிப்பது, எந்தக் கட்சியை நம்புவது என்று பொது மக்கள் தம் தம் அபிப்பிராயத்தை 'ஓட்' மூலம் தெரியப் படுத்துவார்கள். முடி அரசர்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளை அவ்வப்பொழுது காண்பித்து வரமுடியும். மன்னருக்குப் பிடிக்காத மந்திரியை உடனே தள்ளிவிட முடியும். தம் மந்திரிகள் செய்யும் செய்கைகளை அன்றன்று மன்னர் இஷ்டப்பட்டால் கவனித்தும் திருத்தியும் வரமுடியும். ஆனல், கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட 'குடிஅரசு' அப்படிச்செய்ய முடியாது. குடிஅரசு தம் விருப்பு வெறுப்புக்களை உடனடியாகக் காண்பிக்க முடியாது. சில வருடங்களுக் கொரு முறை நடத்தப்படும் 'பொதுத் தேர்தல்' களில்தான் குடியரசின் விருப்பு வெறுப்புகள் தெரியும். அதுவும் நுட்பமாகத் தம் மந்திரிகளின் அன்றாடச் செய்கைகளைப் பற்றி குடியரசு தம் அபிப்ராயத்தை வெளிப்படுத்தவும் வற்புறுத்தவும் முடியவே முடியாது. குடியரசின் அபிப்பிராயம் பொதுவாகவும், கம்பீரமாகவும்தான் இருக்கும். இந்நாட்டிலுள்ள பல கட்சிகளில் ஒரு கட்சியைத்தான் குடியரசு பொறுக்கும். இந்நாட்டில் உலவிவரும் பல கொள்கைகளில், சிலவற்றைத்தான் குடிஅரசு அங்கீகரிக்கும். இவ்விதம் பொதுத் தேர்தலில் ஏதாவது ஒரு கொள்கையைத் தழுவி ஒரு கட்சியைப் பெரும்படியாக நம்பி அதன் கையில் தான் இந் நாட்டை வரும் ஐந்து வருடங்களுக்கு ஆட்சிபுரியும் பொறுப்பைக் குடியரசு ஒப்புவிக்கும். குடிமக்கள் தான் அரசு புரிகின்றனர் என்பதற்கு இது ஒன்றுதான் அடையாளம்; இது ஒன்றுதான் சந்தர்ப்பமும்.

இப்'பொதுத் தேர்தல்' சம்பந்தமான பல முக்கிய சட்ட விஷயங்கள் இந்த இதழில்வெளியிடப் பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவும்.

'காங்கிரஸ்'. எவ்வளவோ கட்சிகள் இருந்தும் 'காங்கிரசி'னிடம் ஒரு கம்பீரமும் பலமும் இருக்கத்தான் இருக்கின்றன. காங்கிரஸ் அதிகார பீடத்தில் அமர்ந்த நாள் முதல் அதில் பல புல்லுருவிகள் ஒட்டிக்கொண்டனர்; கள்ள மார்க்கெட்காரர்கள் பலர் பகல் நேரத்தில் கதர் ஆடை உடுத்து, காங்கிரசில் சேர்ந்து தங்கள் தங்கள் வியாபாரத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டனர்; முன்பு உண்மையில் தியாகம் செய்த காங்கிரஸ்காரர்களில் கூட பலர் 'தியாகக்கூலி' உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்; வேறு பல காங்கிரஸ்காரர்கள் முன்பு ஆங்கிலேயன் இருந்த ஸ்தானத்தை வகித்துப் பொது மக்களைப் பயமுறுத்தித் தன்புறத்தும் பணியை மேற்கொண்டனர்! அதனலென்ன? எத்தனை சாக்கடைகள் வந்து விழுந்தும் கலங்காத மாபெரும் கடலை ஒத்ததன்றோ காங்கிரஸ்! சுயநலத்திற்காகக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் புடம் போடப்பட்டுப் பொன்னாக மாறுகின்றனரல்லவா? காங்கிரசில் சேர்ந்து மக்களைக் கொள்ளையடித்து விடலாமென்று திட்டம் போட்டவர்களின் எண்ணங்கள்தான் காங்கிரசின் கம்பீரத்தால் கொள்ளை கொண்டு போகப்படுகின்றன!

"எஸ்டேட் டியூடி" அல்லது "வார்சு வரி"

சமுதாயத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை அடிக்கடி நிரவல் செய்துகொண்டு மக்களின் அந்தஸ்திலும் வருவாயிலும் அதிக வித்தியாசங்கள் தோன்றாதிருக்கும்படி செய்து வருவது, நவீன அரசாங்கங்களின் ஒரு முக்கிய கடமையாகவே பாவிக்கப்படுகின்றது. இதில் ஒரு நாட்டில் கையாளப்படும் முறைக்கும், மற்ற நாட்டில் கையாளப்படும் முறைக்கும் வித்தியாசமிருக்கலாம். ஆனால் குறிக்கோள் ஒன்றே. அவ்விதம் செய்யப்படாவிட்டால் புரட்சி ஏற்படும். மக்களுள் வித்தியாசங்கள் அதிகமான சமயத்தில்தான் பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டது; அப்பொழுதுதான் ருஷியாவிலும் புரட்சி ஏற்பட்டது. இப்பொழுது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அவ்விதப் பெரும் புரட்சிகள் ஏற்படாமலிருப்பதற்கு அந்நாடுகளின் அரசாங்கங்கள் எடுத்துக்கொள்ளும் துரித நடவடிக்கைகள்தான் காரணம் என்று கூடச் சொல்லலாம். இவ்விதம் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் 'எஸ்டேட்டியூடி' என்ற 'வார்சு வரி' விதிப்பும் ஒன்று. தாம் உழைத்துச் சம்பாதிக்காத சொத்தை ஒருவர் சட்டத்தால் 'வார்சு' என்று அடையும்போது, அச்சொத்தின் ஒரு பாகத்தைத் வரியாகக் சர்க்காருக்குக் கொடுக்கும்படி ஒரு சட்டம் ஏற்பட்டால் இதில் பிரமாதமான தவறு ஒன்றுமில்லை. வேறு ஒருவருடைய சொத்தை அவர் இறந்தவுடன் அடைபவர்தான் 'வார்சு' எனப்படுவர். இவ்வார்சுகள் இறந்தவருடைய மகன், மகள் போன்றவர்களாக இருந்தால் வார்சுவரி இல்லாமலோ குறைவாகவோ இருந்து, மற்ற வார்சுகள் சொத்தை அடையும்போது அவரவருடைய உறவின் தொலைக்குத் தக்கபடி அதிக வரியைக் கொடுத்துச் சொத்தை எடுத்துக் கொள்வதில் அவ்வார்சுகளுக்கே ஆட்சேபனை இருக்காது. மேலும் குறைந்த மதிப்புள்ள சொத்துக்களுக்கு இச்சட்டம் இருக்காது அவ்வித 'வார்சு வரி' விதிக்கும் சட்டம் ஒன்று நமது நாட்டில் ஏற்படும். இது பற்றி அகில இந்தியாவுக்கும் ஒரு பொதுச் சட்டம் இருப்பது நலமென்று பல ராஜ்ய சர்க்கார்கள் தங்கள் அபிப்பிராயத்தை மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றனர். அதை ஒட்டி டில்லி மத்திய சர்க்காரும் 'வார்சு வரிச் சட்டம்' கொண்டுவர ஏற்பாடு செய்கின்றனர். சீக்கிரமாகவே இச்சட்டம் வரலாம்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

42. இந்திய வியாபாரக் கப்பல் சட்டத் திருத்தம். The Indian Merchant Shipping Amendment-Act 1951 (16—7—1951) இந்தியக் கப்பல்களில் வேலைக்கு அமர்த்தப்படுபவர்களின் யோக்கியதாம்சத்தைப் பற்றிச் சில புது ஷரத்துக்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

43. ஜனப்பிரதிநிதிச் சட்டம். The Representation of the people Act 1951 (17—7—1951). இந்திய யூனியன் பார்லிமெண்ட் சபைக்கும், ராஜ்ய சட்ட சபைகளுக்கும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க நடக்கும் பொதுத் தேர்தல்களை (எலெக்ஷன்) நடத்தும் விஷயமாயும், அங்கத்தினர்களின் யோக்கியதாம்சங்களைப்பற்றியும், 'எலெக்ஷன்' சம்பந்தமான குற்றங்களைப் பற்றியும் 'எலெக்ஷன்' தகராறுகளை விசாரணை செய்து தீர்ப்பளிப்பது பற்றியும் இச் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. 'எலெக்ஷன்' சம்பந்தமான இம் முக்கிய சட்டத்தின் ஷரத்துக்கள் விவரமாய் விளக்கப்படும்.

(மத்திய) அவசரச் சட்டங்கள். ரயில்வே கம்பெனிகள் நெருக்கடி நிலைமை பற்றிய அவசரச் சட்டம். Railway Companies - Emergency Provisions ordinance (14—7—1951). பார்லிமெண்ட் கூடாமலிருந்தபோது ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட 1951 ஆம் வருடத்திய 2-ஆவது 'ஆர்டினன்ஸ்' என்ற அவசரச் சட்டம். எந்த ரயில்வே கம்பெனியின் நிர்வாகத்திலும், பொதுமக்களுடைய போக்குவரத்துச் சௌகரியத்திற்கோ, வியாபாரத்திற்கோ, கெடுதி ஏற்படும் நிலைமை ஏற்பட்டாலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டாலும், அந்த ரயில்வே

கம்பெனியின் நிர்வாகத்தைச் சர்க்காரே எடுத்துக் கொள்வதற்கான விதிகள் அடங்கிய சட்டம்.

இந்தியக் கம்பெனிகள் (திருத்த) அவசரச் சட்டம். Indian Companies—Amendment ordinance 1951 (21-7-1951). இது ஜனாதிபதி அவர்களால் பார்லிமெண்ட் கூடாமலிருக்கும்போது பிரகடனம் செய்யப்பட்ட 1951 ஆம் வருடத்திய 3-ஆம் அவசரச் சட்டம். சில கம்பெனிகளின் பெரும்பான்மையான பங்குகளை (ஷேர்களை), சிலர் வாங்கி அக்கம்பெனியின் நிர்வாகத்தையே தம் கைக்குள் கொண்டு வரும் பழக்கத்தைத் தடுக்கவே இச்சட்டம் அவசரமாக இயற்றப் பட்டிருக்கிறது. இனி கம்பெனியின் நிர்வாகம் மாற்றப்பட வேண்டுமானால் சர்க்கார் அங்கீகாரம் வேண்டும்.

1951 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச்சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை-சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

17. ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டத் திருத்தம். The Madras Estates-Abolition and Conversion into Ryotwari-Amendment Act 1951 (7—8—1951). 1948ஆம் வருடத்திய சென்னை ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமாக:—

(1) ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டப்படி ரயத்து வாரியாக மாற்றப்படும் 'எஸ்டேட்'களில், ஊழியம் அல்லது சேவைக்காகக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு (Service tenure) யாருக்குப் பட்டாக் கொடுப்பதென்பதைப்பற்றி, செக்ஷன் 17-ல் சொல்லப் பட்டிருக்கிறது. அதன்படி அவ்வித நிலங்களை வைத்திருப்பவர் செய்யவேண்டிய ஊழியம் ஜமீன்தார் அல்லது இனம்தாருடைய சொந்த சௌகரியத்திற்காக (Personal or Private Service) செய்ய வேண்டிய ஊழியமாக இருந்தால், நிலத்தை அவ்விதம் வைத்திருப்பவருக்கே ரயத்துவாரிப் பட்டா கொடுக்கப்படும்; மேலும் இனி அவர் அவ்வித ஊழியம் அல்லது சேவையும் செய்ய வேண்டியதில்லை. (இவ்விதி மத ஸ்தாபனங்களுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் பொருந்தாது.) மேற்கண்டபடி இல்லாமல், நிலம் வைத்திருப்பவர் வேறுவகை ஊழியம் அல்லது சேவை செய்வதற்காக அந்நிலத்தை அவர் வைத்திருந்தால் அவருக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்கப் படமாட்டாது; ஆனால் இப்பொழுது ரயத்துவாரி கிராமங்களில் உள்ள மைனர் இனம் நிலங்களை வைத்திருப்பவருக்குள்ள அதே பாத்தியங்கள் அவருக்கு உண்டு என்று இருக்கிறது. இவ்வாசகம் ஒரு பூரா கிராமமே ஊழியம் அல்லது சேவைக்காக விடப்பட்டிருந்தாலும் சரி, அல்லது ஒரு கிராமத்தில் சில நிலங்கள் மட்டில் அவ்விதம் விடப் பட்டிருந்தாலும் சரி, இரண்டுக்கும் பொருந்தும்படியாக இருந்ததை இத்திருத்தச் சட்டத்தால் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இனி மேற்கண்ட விதிகள் ஒரு பூரா கிராமமும் ஊழியம் அல்லது சேவைக்காக விடப் பட்டிருந்தால் கிடையாது—என்று செக்ஷன் 17 திருத்தப்பட்டிருக்கிறது.

(2) செக்ஷன் 38 A என்று ஒரு புது செக்ஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனம் கிராமம் அல்லது அதன் பாகத்தை வைத்திருப்பவர் ஒரு கோயிலுக்கு (மத ஸ்தாபனத்திற்கு)-ச் சேவை செய்ய வேண்டியதாக இருந்தால், ஜமீன் இனம் ஒழிப்புச்சட்டப்படி அக்கிராமம் ரயத்துவாரியாக மாற்றப்பட்டாலும், கோயில் அல்லது மத ஸ்தாபனத்தார்கள் இஷ்டப் பட்டால், அவருக்கு எழுத்து மூலம் ஒரு நோட்டீஸ் கொடுத்து முன்போலவே அவர் சேவை செய்து வர வேண்டுமென்று கேட்கலாம். ஆனால் அவர் செய்யும் சேவைக்குக் கோயிலார் பிரதிப்பிரயோஜனம் கொடுக்க வேண்டும். அது எவ்வளவு என்று இருவரும் ஒத்துச் செய்து கொள்ளலாம். ஒத்துப்போக முடியாவிட்டால், சேவை செய்பவர் அடைய வேண்டிய பிரதிப்பிரயோஜனம் எவ்வளவு என்று இந்து மத ஸ்தாபன பரிபாலன போர்டார் நிர்ணயம் செய்வார்கள். ஆனால் சேவை செய்ய வேண்டியவர் வேறு ஒரு முறையையும் பின் பற்றலாம். அதாவது அவர் வைத்திருந்த இனம் கிராமத்தைத் திறப்பாக்கியதற்காக, சர்க்காரால் அவருக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈட்டுத் தொகை ஜாடாவையும் அவர் அக் கோயிலுக்கோ மத ஸ்தாபனத்திற்கோ கொடுத்துவிட்டால், அவர் செய்ய வேண்டிய சேவைக்குப் பிரதி பிரயோஜனமாக இச்சட்டத்தில் 38-ஆவது செக்ஷனில் கண்டபடி கணக்காகும் தொகையை ஒவ்வொரு வருடமும் அக்கோயில் அல்லது மத ஸ்தாபனத்திலிருந்து அவர் பெற்றுக் கொண்டு வரலாம். அதாவது கோயிலே இனம்தாராக இருந்து, அந்த இனம் திறப்பாக மாற்றப்பட்டால் அக் கோயிலுக்கு, சர்க்காரால் ஒவ்வொரு வருடமும் எவ்வளவு

தொகைகள் கொடுத்துவர வேண்டுமென்று செக்ஷன் 38-ல் குறிக்கப் பெற்று இருக்கிறது. அதே விகிதம் கணக்குச் செய்யப்படும் தொகையை மேற்கண்டபடி சேவை செய்பவர் அடைந்துவரலாம் என்று புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(3) புதிதாக, செக்ஷன் 58 A என்று சேர்க்கப்பட்டிருகிறது. சர்க்காரால் செக்ஷன் 54-A யின்படி நஷ்ட ஈட்டுத் தொகைகளைக் கட்டுவதற்குமுன் ஒரு இனாம்தார் அல்லது ஜமீன்தார் மீதுள்ள டிக்ரியை, எந்தக் கோர்ட்டும் நிறைவேற்றக் கூடாதென்று ஒரு புது ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. 19—4—1949 அன்றோ அதற்குப் பின்போ ஒரு ஜமீன்தார் அல்லது இனாம்தாருடைய எந்த ஸ்தாவர சொத்துக்கள் கோர்ட் ஏலம் போயிருந்தாலும், அவர் இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் (இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி 7—8—1951) கோர்ட்டுக்கு மனுக் கொடுத்தால் ஏலம் ரத்துச் செய்யப்படும். ஆனால் மிகக் குறைந்த விலைக்கே அவருடைய சொத்துக்கள் ஏலம் போயிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தோன்றினால்தான் ஏலம் ரத்துச் செய்யப்படும். இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியன்று ஒரு ஜமீன்தார் அல்லது இனாம்தாரை அரஸ்டு செய்து சிவில் ஜெயிலில் வைக்க வேண்டுமென்று கோரும் நிறைவேற்றுமனுக்கள் தள்ளுபடியாகும்; டிக்ரியை நிறைவேற்றியதால் ஜெயிலில் இருப்பவர்களும் விடுவிக்கப் படுவார்கள். மேற்கண்டபடி ஒரு கோர்ட் ஏலம் ரத்துச் செய்யப்பட்டு விட்டால், அந்த ஜமீன்தார் அல்லது இனாம்தாரால் 19—4—1949 அல்லது அதற்குப்பின் செய்யப்பட்ட எவ்வித ஸ்தாவர சொத்துப் பராதீனங்களும், ஏலம் ரத்துச் செய்யப்பட்ட டிக்ரிக்காரருக்கு விரோதமாகச் செல்லா. மேலும் ஒரு எஸ்டேட் திறப்பாக்கப் படுமென்று சர்க்காரால் விளம்பரம் செய்யப் பட்ட தேதிக்குப்பின், சர்க்காரால் நஷ்ட ஈட்டு தொகைகள் கட்டப்படுவதற்கு முன் ஒரு ஜமீன்தார் அல்லது இனாம்தாரால் செய்யப்படும் கிரயம், அடமானம், குத்தகை முதலிய எவ்வித ஸ்தாவர சொத்தைப் பற்றிய பராதீனங்களும் செல்லா.

(4) செக்ஷன் 59-ல் உட்பிரிவு (3) என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி ஒரு ஜமீன் அல்லது இனாம் திறப்பாக மாற்றப்படும் என்று சர்க்கார் விளம்பரம் செய்யும் தேதிக்குப்பின், சர்க்காரால் நஷ்ட ஈட்டு தொகை கட்டப்படும் முன் ஜமீன்தார் அல்லது இனாம்தார் எவ்விதக் கடன்களுக்கும் வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூபாய் 6-க்கு மேல் வட்டி கொடுக்க வேண்டியதில்லை என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(5) இச்சட்டப்படி டிரிபுனல், ஸ்பெஷல் டிரிபுனல் அல்லது ஹைகோர்ட்டால் செய்யப்படும் தீர்ப்புகள் அதே நபர்களையும் அவர் வார்சுகளையும் பொறுத்த வரையில் அவர்கள் சிவில் கோர்ட்டுகளில் நடத்தும் நடவடிக்கைகளிலும் கட்டுப்படுத்துமென்றும்; அதேவிதம் முன்சீப் அல்லது ஸ்மால்காஸ் கோர்ட்டுகள் நீங்கலாக மற்றச் சிவில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளும் இச்சட்டப்படி அமைக்கப்பட்ட டிரிபுனல், ஸ்பெஷல் டிரிபுனல், ஹைகோர்ட் இவர்களைக்கட்டுப்படுத்துமென்றும் - ஒரு புது ஷரத்து, செக்ஷன் 64A என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் 'Res Judicate' என்று சொல்வது

(6) காலாவதி நீட்டிப்புச் சம்பந்தமாய், செக்ஷன் 64 B என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(7) ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்ட ஷரத்துக்கள் சிவகங்கை ஜமீன் எஸ்டேட்டிலுள்ள 57 இனாம் கிராமங்களுக்கும், ராமநாதபுரம் ஜமீன் எஸ்டேட்டிலுள்ள 10 இனாம் கிராமங்களுக்கும் பொருந்தாவென்றும், ஏற்கனவே இச்சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை சரி அல்ல என்றும் ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழில்

விற்பனை வரி

தனிப்பிரதி

விலை ரூபாய் 2—0—0

(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

தனிப்பிரதி தேவையானால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 2—8—0 அனுப்பினால் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்

"வக்கீல்" காரியாலயம்,

தபால் பெட்டி 26, கும்பகோணம் (S I)



உலையில்

இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாகவில்லை. சட்டங்கள் இயற்றப்படுமுன், அவ்விஷயத்தைப்பற்றிய பூர்வாங்க நடவடிக்கைகள், அதாவது, கமிட்டியின் சிபார்சுகள், மசோதாக்கள், பொறுக்குக்கமிட்டி ரிப்போர்டுகள், சர்க்கார் அறிக்கைகள் போன்ற விஷயங்களை நேயர்கள் இப்பகுதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சென்னை நிலச்சீர்திருத்தக் கமிட்டியின் மற்றச் சிபார்சுகள்

சென்னை நிலச்சீர்திருத்தக் கமிட்டியின் சிபார்சுகளில் முதற்பாகம் 1-7-1951 ல் பிரசுரம் செய்யப்பட்டது. அதில் அடங்கிய முக்கிய விஷயங்கள் சென்ற மாத "வக்கீல்" இதழில் இப்பகுதியில் விளக்கப்பட்டது. அக்கமிட்டியார் தங்களுடைய மற்றச் சிபார்சுகளை இரண்டாவது பாகமாக 15-8-1951 ல் பிரசுரம் செய்திருக்கின்றனர். இந்த இரண்டாவது பாகத்தில் அடங்கிய சிபார்சுகள் நிலங்களின் மீது வரிவிதிப்பது சம்பந்தமாயும், கிராம நிர்வாகத்தைப் பற்றியும்தான். இவைகளிலும் அடிப்படையான மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமென்றே இக்கமிட்டியார் அபிப்பிராயப் படுகின்றனர்.

கிராம அதிகாரிகள் மறைந்து விடுவார்கள்

இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனி, பெரிய தனக்காரரும் (மணியக்காரர் Head man) ஒரு தனி கர்ணமும் இருப்பது போல் இனியும் இருந்து வரவேண்டிய அவசியமில்லை என்றும்; பரம்பரைப் பாத்தியங்கள் உடனடியாகவே எடுத்து விடப்படவேண்டுமென்றும், இக்கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றனர். அதற்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து மணியக்காரர் வேலைகளைச் செய்ய ஒரு மேல் வகுப்புக் குமாஸ்தா (Upper Division clerk) சம்பளத்தில் ஒருவரும்; கர்ணத்தின் வேலைகளைச் செய்ய ஒரு கீழ் வகுப்புச் (Lower Division clerk) சம்பளத்தில் ஒருவரும், மூன்று பியூன்களும் நியமிக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கின்றனர். இவர்கள் பக்கா சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும், லீவு, பென்ஷன் உரிமைகளுடனும் இருப்பார்கள். ஆனால் ஒன்று மட்டில் அவர்களுக்கு கிடையாது. அதாவது இவர்கள் மேல் உத்தியோகங்களுக்கு மாற்றப்படமாட்டார்கள். இவர்களுக்குப் 'புரமோஷன்' கிடையாது; பஞ்சப்படியும் கிடையாது. இவர்கள் அந்தத் தாலூகா வாசிகளாகவே இருக்கவேண்டும். அந்தத் தாலூகாவிலேயே ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மட்டில் மாற்றப்படலாம்.

இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தவுடன் 'ரிவன்யூ' இன்ஸ்பெக்டர்களும் போய் விடுவார்கள்.

ஏழு வகை நிலவரிகள்

நிலவரி சம்பந்தமாக கீழே கண்ட சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன:—

(1) ஒவ்வொரு நிலத்திற்கும் இப்பொழுது இருப்பது போல் ஒரு நிலவரி (assessment) இருக்கவேண்டும். ஆனால் இது ஒரு நிரந்தர வரியாக இருக்கவேண்டும். மேலும் ராஜ்யம் பூராவிலும் ஒரே தினுசான நிலத்திற்கு ஒரே விகிதமான வரிவிதிக்கப்படவேண்டும். 1905-1906க்கு முன் ஏற்பட்ட 'செட்டில் மெண்ட்களை' அப்படியே வைத்துக் கொண்டு, அதற்குப் பின் ஏற்பட்ட ரீ செட்டில்மெண்ட்களை சில இடங்களில் பூராவும் சில இடங்களில் சரிபாதியையும் ரத்துச் செய்தால் ஒரே ரீதியான வரியை ராஜ்யம் பூராவும் விகித்ததாகுமென்று கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றனர்.

(2) மேற்கண்ட நிலவரி (assessment) தவிர, விவசாய வருமான வரிச் சட்டம் ஒன்று இயற்றி, (Agricultural Income Tax Act) ஒருவருக்கு நில வரும்படி அதிகமாக அதிகமாக வரிவிகிதமும் அதிகரிக்கும்படி இது விதிக்கப்படவேண்டும்.

(3) மேற்படி விவசாய வருமான வரிச் சட்டம் இயற்றப்படுமுன், தாற்காலிகமாகவும் உடனடியாகவும் கீழ்க்கண்டபடி அவரவர் கொடுக்கும் நிலவரியை ஆதாரமாக வைத்து 'Surcharge' என்ற ஒரு அதிகவரி வசூல் செய்யப் படவேண்டும். அதாவது:—ரூ. 150

வரையில் நிலவரி (assessment) செலுத்து கிறவர்கள் இந்த, 'சர்சார்ஜ்' வரி கொடுக்க வேண்டியதில்லை ரூ 150 முதல் 250 வரை நிலவரி கொடுப்பவர்கள் ரூபாய் 1க்கு 0–1–6 வீதமும்; அதற்குமேல் ரூபாய் 500 வரை ரூபாய் 1க்கு 3 அணா வீதமும், அதற்குமேல் ரூபாய் 1000 வரை ரூ. 1க்கு 4 அணா வீதமும், அதற்குமேல் ரூ. 2500 வரை ரூ. 1க்கு 6 அணா வீதமும்; ரூ 2500க்கு மேல் ரூ. 1க்கு அணா 8 வீதமும் கணக்குச் செய்து ஒரு அதிகவரி (சர்சார்ஜ்) கொடுக்கவேண்டும். விவசாய வருமான வரிச்சட்டம் அமுலுக்கு வரும் வரை தான் இந்த 'சர்சார்ஜ்'. பிறகு அச்சட்டப்படி வருமானவரி வசூல் செய்யப்படும்.

(4) இவை தவிர வியாபாரப் பயிர்களுக்கும் அதிக பொறுமானமுள்ள பயிர்களுக்கும் (Commercial or other Valuable Crops) ஒரு விசேஷ சர்சார்ஜ் (Special Surcharge) என்ற அதிக வரியும் விதிக்கப்படும். ஒருவருக்கு உள்ள மொத்தநிலங்களில் 4ல் 1 பங்கு, ஆனல் 3 ஏகருக்கு மேற்படாமல், உள்ள நிலங்களுக்கு இந்த விசேஷ சர்சார்ஜ் விதிக்கப்படமாட்டாது. இந்த விசேஷ சர்சார்ஜும் அந்தந்தப் பயிர்களுக் குத் தக்கபடி நிலவரியில் ரூ. 1 க்கு எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவேண்டும்:—(1) கரும்பு மஞ்சள், நாரத்தை, எலுமிச்சை, வெற்றிலை, மிளகு, சிக்கரி, திராக்ஷை—இவைகள் பயிரிடப்படும் நிலங்களுக்கு நிலவரி ரூ. 1க்கு 0-12-0 வீதம் அதிக சர்சார்ஜ். (2) தென்னை ரூ. 1க்கு அணா 10 வீதம். (3) மா, வெங்காயம் ரூ. 1க்கு அணா 8 வீதம் (4) பருத்தி ரூ. 1க்கு அணா 6 வீதம் அதிக சர்சார்ஜ் விதிக்கப்பட வேண்டுமென்றும். புகையிலைக்கு ஏகர் 1 க்கு ரூ. 10 ம் மணிலாக் கொட்டைக்கு ஏகர் 1 க்கு ரூ. 1-8-0 வீதமும் அதிக சர்சார்ஜ் வரி இருக்கலாமென்றும், சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. (5) இவை தவிர, சென்னையில் இருப்பதுபோல் மற்ற முனிசிபாலிட்டிகளிலும் ஒரு நிலவரி (Ground rent) விதிக்கப்பட வேண்டும் (6) இவை தவிர தண்ணீர்த் தீர்வை. (7) மற்றச்செஸ்கள் — சம்பந்தமாகவும் சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன,

விஜயா ஔஷத சாலை,

1, சக்கரபாணிகோயில் வடக்கு வீதி,

கும்பகோணம்.

[Effective treatment guaranteed for chromic and acute diseases—Specialist in the treatment of Leprosy of any type, Asthma, Diabetes, Piles, Epilepsy, whooping cough, and Nervous Debility.]

1. பூர்ண சந்திரோதய மகரத்வஜம்
க்ஷயம், தாதுபலஹீனம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒப்பற்றது.
ஒரு விராகனிடை ரூ. 30-0-0

2. விஜயா காயகல்பம்
சிறந்த யௌவனமளிக்கும் டானிக் உணவு. 15 நாள் உபயோகம்.
1 பௌண்டு பாட்டில் ரூ. 4-0-0

3. ஜீவாக்னிரஸம்
ஜலதோஷம், ஜுரம், ஜன்னி முதலியவைகளுக்குச் சிறந்தது.
20 மாத்திரை பாட்டில் 1க்கு ரூ. 1-0-0

4. கக்குவான் மருந்து
கக்குவானுக்கும் இருமலுக்கும் கைகண்ட மருந்து. 1 தோலா ரூ. 1-0-0

5. விஜயா ஆயிண்டுமெண்டு
அக்கி, கரப்பான், சொரி, சிரங்கு, புண், புரை, காயம் முதலியவைகளுக்குச் சிறந்தது. பாட்டில் 1க்கு ரூ. 0-12-0

6. சவனப்ராசம்
7. வில்வாதி லேகியம்
1 சேர் டின் ரூ. 3-8-0
½ சேர் டின் ரூ. 1-12-0

8. அஸ்வகந்தி ரஸாயனம்
9. ஸௌபாக்ய சுண்டி
1 சேர் டின் ரூ. 3-0-0
½ சேர் டின் ரூ. 1-8-0

10. தாமரைத் தைலம்
11. குமரித் தைலம்
12. கருஞ்செம்பைத்தைலம்
13. ப்ருங்காமாலக தைலம்
5 oz. பாட்டில் ரூ. 1-8-0

14. வீரபலாத் தைலம்
2 oz. பாட்டில் ரூ. 1-2-0

தவிர சிந்தூரங்கள் பஸ்பங்கள் லேகியங்கள் தைலங்கள் க்ருதங்கள் முதலியவை சிறந்த ஆயுர்வேத முறைப்படி தயார்செய்து சரஸமான விலைக்குக் கொடுக்கப்படும்.

ஏஜெண்டுகள் தேவை

ஆயுர்வேத ரத்னம்
R. ராமானுஜாச்சாரியார்,
Regd. Medical Practitioner (Indian System).

தேர்தல் (எலெக்ஷன்) சம்பந்தமான புதிய சட்டங்கள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்திய யூனியன் பூராவுக்கும் சட்டம் செய்ய அதிகாரமுள்ளது இந்திய 'பார்லிமெண்ட்' தான். பார்லிமெண்ட் என்பது,

(1) மக்கள் சபை (House of the People).

(2) ராஜ்யங்களின் சபை (Council of States).

(3) ஜனாதிபதி (President) இவர்கள் அடங்கியது. ஜனாதிபதி அவர்களையும் ராஜ்யங்களின் சபை அங்கத்தினர்களையும் பொதுமக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால் 'மக்கள் சபை' (House of the People) என்ற மிக்க சக்தி வாய்ந்த சபையின் அங்கத்தினர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள். தவிர ஒவ்வொரு ராஜ்யத்திலும் உள்ள சட்ட சபைகளின் அங்கத்தினர்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டபடி தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். இவ்விதம் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கும் ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு அங்கத்தினர்கள் உண்டென்றும், எவ்வளவு தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும் யார் ஓட்டு கொடுத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் நிர்ணயம் செய்து தேர்தல்கள் நடத்துவதற்காக இந்தியப் (தாற்காலிக) பார்லிமெண்டால் 1950ல் ஜனப் பிரதிநிதிச் சட்டம் (The Representation of the people Act 1950) என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1950 ஜூலை மாத "வக்கீல்" பார்க்கவும்.

இச்சட்டப்படி இந்திய யூனியன் பார்லிமெண்டின் 'மக்கள் சபை' (House of the People)யில் அடியில் கண்ட எண்ணிக்கைப்படி ஒவ்வொரு ராஜ்யமும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்.

A. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1.	அஸ்ஸாம்	12
2.	பீஹார்	55
3.	பம்பாய்	45
4.	மத்திய பிரதேசம்	29
5.	மதராஸ்	75
6.	ஒரிசா	20
7.	பஞ்சாப்	18
8.	உத்தர பிரதேசம்	86
9.	மேற்கு வங்காளம்	34

B. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1.	ஹைதராபாத்	25
2.	காஷ்மீர்	6
3.	மத்திய பாரத்	11
4.	மைசூர்	11
5.	பாடியாலா யூனியன்	5
6.	ராஜஸ்தான்	20
7.	சௌராஷ்டிரா	6
8.	திருவாங்கூர் - கொச்சி	12

C. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1.	அஜ்மீர்	2
2.	போபால்	2
3.	பிலாஸ்பூர்	1
4.	குடகு	1
5.	டில்லி	4
6.	ஹிமாசலப் பிரதேசம்	3
7.	கட்ச்	2
8.	மணிபூர்	2
9.	திரிபுரா	2
10.	விந்திய பிரதேசம்	6
11.	அந்தமான் நிகோபார் தீவுகள்	1
	மொத்தம்	496

இச்சட்டத்தில் ஒவ்வொரு ராஜ்யத்திலுள்ள கீழ்ச் சட்டசபை, மேல் சட்டசபை இவைகளுக்கு மொத்த அங்கத்தினர்கள் எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டுமிருக்கிறது.

சென்னைக் கீழ்ச் சபை (Legislative Assembly)க்கு 375 அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

சென்னை மேல் சபை (Legislative Council)க்கு 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். (இவர்களுள் ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் (Local authorities Constituency) 24; கல்விப் பட்டதாரிகளால் (Graduates Constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6; உபாத்தியாயர்களால் (Teachers' constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6; கீழ்ச் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள் 24; விசேஷ யோக்கியதைக்காகக் கவர்னரால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் 12; ஆக 72.)

இவ்விதம் இச்சட்டத்தால் இந்திய பார்லிமெண்ட் சபைக்கும் ராஜ்யங்களின் ஒவ்வொரு

சட்ட சபைக்கும் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு மாகாணத்தையும் (ராஜ்யத்தையும்) தனித்தனித் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் எவ்வளவு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்றும், ஒவ்வொரு தொகுதியிலும் பிற்போக்குப் பிரதிநிதிகளுக்காக எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் விவரமாக நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதி அவர்களுக்கு அச்சட்டத்தின் 6, 9 செக்ஷன்களின்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு பிறப்பிக்குமுன் ஜனாதிபதி அவர்கள் 'தேர்தல் கமிஷன்' (Election Commission) என்ற ஸ்தாபனத்தைக் கலந்து கொள்ளவேண்டும். ஜனாதிபதி அவர்களால் செய்யப்படும் உத்தரவு பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்படும். அப்படி சமர்ப்பிக்கப்பட்ட 21 தினங்களுக்குள் அதில் ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டுமானாலும் செய்ய, பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. இதை அனுசரித்து இப்பொழுது ஜனாதிபதி அவர்களால் ஒவ்வொரு ராஜ்யத்தைப்பற்றியும் தனித்தனி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் சென்னைப் பார்லிமெண்ட் சட்டசபை தொகுதி நிர்ணய உத்தரவு 1951 (The Delimitation of Parliamentary and Assembly Constituencies - Madras - Order 1951) என்ற உத்தரவு ஜனாதிபதி அவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (S. R. O. 706 C. 18—5—1951 தேதியுள்ள இந்தியா கெஜட்-விசேஷ வெளியீடு பாகம் II—செக்ஷன் 3 பக்கம் 671) இந்த உத்தரவின்படி சென்னை ராஜ்யத்திலுள்ள தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்டவரையில் கீழேகண்டபடி தொகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தொகுதிக்கும் எத்தனை ஸ்தானங்கள் உண்டென்றும் அதில் ஷெட்யூல் வகுப்பினருக்கு (Scheduled Castes) எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் ஷெட்யூல் மலைஜாதியினருக்கு (Scheduled Tribes) எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்டவரை தொகுதிகள்
இந்திய யூனியன் பார்லிமெண்ட் மக்கள் சபை (House of the People) தொகுதிகள்

தொகுதியின் பெயர்	தொகுதியின் விஸ்தீர்ணம்	மொத்த ஸ்தானங்கள்	ஒதுக்கப்பட்டவை: ஷெடியூல் ஜாதியினருக்கு	ஒதுக்கப்பட்டவை: ஷெடியூல் மலைவாசிகளுக்கு
சென்னை	சென்னை சிடி சைதாப்பேட்டை தாலுகாவும் குன்னத்தூர் பிர்காவும்.	2	1	..
செங்கல்பட்டு	செங்கல்பட்டு ஜில்லா (சைதாப்பேட்டை தாலுகா, குன்னத்தூர் பிர்கா, பெரம்தூர், காஞ்சிபுரம் பிர்காக்கள் நீங்கலாக. ஆனால் காஞ்சிபுரம் பிர்காவில் சில கிராமங்கள் உண்டு.)	2	1	..
காஞ்சிபுரம்	பெரம்தூர், காஞ்சிபுரம் பிர்காக்கள், அரக்கோணம், வாலாஜாப்பேட்டை, செய்யார் தாலுகாக்கள் (அனகாவூர் வக்கடை, ராணிப்பேட்டை, வாலாஜாபெட் பிர்காக்கள் நீங்கலாக)	1	..	..
வேலூர்	திருவண்ணாமலை, செங்கம், திருப்பத்தூர், வேலூர், குடியாத்தம் தாலுகாக்களும், ராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை பிர்காக்களும்.	2	1	..
வந்தவாசி	வந்தவாசி, போளூர், ஆரணி தாலுகாக்கள், அனகாவூர், வக்கடை பிர்காக்கள்.	1	..	..
கிருஷ்ணகிரி	சேலம் ஜில்லாவில் கிருஷ்ணகிரி, ஹஸூர், ஹோசூர் தாலுகாக்கள்.	1	..	..
தர்மபுரி	சேலம் ஜில்லாவில் ஓமலூர், தர்மபுரி தாலுகாக்களும் இடப்பாடி பிர்காவும்.	1	..	..

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18771
சென்னை-600 008

சேலம்	சேலம், ராசிபுரம் தாலூகாக்கள், ஏற்காடு சப்தாலூகா, எதப்பூர், ஆத்தூர் பிர்காக்கள். (ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள் இல்லை).	[illegible]	[illegible]	[illegible]
ஈரோடு	ஈரோடு, பவானி தாலூகாக்கள், குகலூர் பிர்கா, கோபிசெட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள்.	1	..	..
திருச்செங் கோடு	திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்கள் (இடப்பாடி பிர்கா நீங்கலாக).	1	..	..
திருப்பூர்	கொள்ளேகாலம், கோபிசெட்டிப்பாளயம், திருப்பூர் தாலூகாக்கள், சேவூர், அவனசி வாரப்பட்டி பிர்காக்களும், கோபிசெட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
பொள்ளாச்சி	பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை தாலூகாக்கள், வாரப்பட்டி பிர்கா, குண்டாடம் பிர்காவில் சில கிராமங்கள்.	1	..	..
கோயமுத்தூர்	நீலகிரி ஜில்லா; அவனசி தாலூகா (சேவூர் அவனசி பிர்காக்கள் நீங்கலாக); கோயமுத்தூர் தாலூகா (கோயமுத்தூர் பிர்கா நீங்கலாக - ஆனல் கோயமுத்தூர் முனிசிபாலிடி உண்டு.)	1	..	..
கரூர்.	கரூர் தாலூகா, கட்டளை, குழித்தலை, பஞ்சப்பட்டி பிர்காக்கள்; தர்மபுரம் தாலூகா. (வெள்ளக்கோயில், குண்டாடம் பிர்காக்களில் சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
புதுக்கோட்டை	ஆலங்குடி, திருமயம், குளத்தூர் தாலூகாக்கள், இலுப்பூர் திருவரம்பூர், மணி கண்டம் பிர்காக்கள்; குழித்தலை தாலூகா (கட்டளை, குழித்தலை, பஞ்சப்பட்டி பிர்காக்கள் நீங்கலாக)	1	..	..
பெரம்பலூர்	பெரம்பலூர், உடையார்பாளயம் தாலூகாக்கள்; (அரியலூர், திருமலைவாடி பிர்காக்கள் நீங்கலாக); உப்பிலியாபுரம் கண்ணனூர் பிர்காக்கள், தாத்தய்யங்கார் பேட்டை பிர்கா. (இதில் சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
திருச்சிராப் பள்ளி	லால்குடி தாலூகா (புள்ளம்பாடி பிர்கா நீங்கலாக) திருச்சி தாலூக்கா (இலுப்பூர், திருவரம்பூர் மணிகண்டம் பிர்காக்கள் நீங்கலாக) முசிறி தாலூகா (உப்புலியாபுரம், கண்ணனூர் தாத்தய்யங்கார் பேட்டை பிர்காக்கள் நீங்கலாக ஆனல் தாத்தய்யங்கார் பேட்டை பிர்காவில் சில கிராமங்கள் மட்டும் உண்டு).	1	..	..
தஞ்சாவூர்	அரந்தாங்கி, பட்டுக்கோட்டை தஞ்சாவூர் தாலூகாக்கள் (திருவையாறு, நடுக்காவேரி பிர்காக்கள் நீங்கலாக.)	1	..	..
கும்பகோணம்	கும்பகோணம் பாபநாசம் தாலூகாக்கள் (நாச்சியார் கோயில் பிர்கா நீங்கலாக); திருவையாறு நடுக்காவேரி பிர்காக்கள்; புள்ளம்பாடி, அரியலூர் திருமலைவாடி பிர்காக்கள்.	1	..	..
மாயூரம்	மாயூரம், சீர்காழி, நன்னிலம், மன்னர்குடி, திருத்துறைப் பூண்டி, நாகபட்டினம் தாலூகாக்கள்; நாச்சியார் கோவில் பிர்கா.	2	1	..
கூடலூர்	விருத்தாசலம், சிதம்பரம், கூடலூர் தாலூகாக்கள் (பண்ருட்டி சப்தாலூக்கா நீங்கலாக); கள்ளக்குறிச்சி தாலூகா (பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக) தலைவாசல், வீராங்கனூர், கங்கவல்லி பிர்காக்கள்; ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள்.	2	1	..
திண்டிவனம்	திண்டிவனம், செஞ்சி, திருக்கோயிலூர், விழுப்புரம் தாலூகாக்கள்; பண்ருட்டி சப்தாலூகா; பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள்.	2	1	..
திருநெல்வேலி	திருநெல்வேலி, நாங்குனேரி, அம்பாசமுத்திரம் தாலூகாக்கள் (அம்பாசமுத்திரம் கடயம் பிர்காக்கள் நீங்கலாக).	1	..	..
ஸ்ரீவைகுண்டம்	ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலூகாக்கள்; விளாத்தி குளம், ஓட்டப்பிடாரம் பிர்காக்கள்.	1	..	..

சங்கர நயினார் கோயில்	தென்காசி தாலுகா; அம்பாசமுத்திரம், கடயம் பிர்காக்கள்; சங்கர நயினார் கோயில் தாலுகா (திருவேங்கடம் பிர்காவும் பழங்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாகவும்.)	1	..	..
அறுப்புக் கோட்டை	கோயில்பட்டி தாலுகா (விளாத்தி குளம், ஒட்டப்பிடாரம் பிர்காக்கள் நீங்கலாக) திருவேங்கடம் பிர்கா; பழங்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள்; முதுகளத்தூர், அறுப்புக்கோட்டை தாலுகாக்கள்; பார்த்தபனூர் பிர்கா (அறுப்புக் கோட்டை தாலுகாவில் கரியாப்பட்டி பிர்கா நீங்கலாக).	1	..	..
ராமநாதபுரம்	திருவதானி, ராமநாதபுரம், பரமக்குடி, திருப்பத்தூர் தாலுகாக்கள் (பார்த்தபனூர் இளயாங்குடி, கள்ளல் பிர்காக்கள் நீங்கலாக).	1	..	..
ஸ்ரீ வில்லி புத்தூர்.	ஸ்ரீ வில்லிபுத்தூர், சாத்தூர் தாலுகாக்கள், கரியாப்பட்டி பிர்கா.	1	..	..
மதுரை	மதுரை, மேலூர், நிலக்கோட்டை தாலுகாக்கள்; தேவதானப் பட்டி, திருமங்கலம், கள்ளிகுடி கல்லுப்பட்டி பிர்காக்கள்; சாணாரப்பட்டி, வட மதுரை (இதில் சில கிராமங்கள் நீங்கலாக); சிவகங்கை தாலுகா; இளயான்குடி பிர்கா, கள்ளல் பிர்கா.	2	1	..
பெரிய குளம்	கோடைக்கானல், பெரிய குளம் தாலுகாக்கள், உசிலம்பட்டி, சேதாப்பட்டி, பணி குண்டு, வளந்தூர் பிர்காக்கள் (தேவதானப் பட்டி பிர்கா நீங்கலாக).	1	..	..
திண்டுக்கல்	பழநி தாலுகா, ஆத்தூர், திண்டுக்கல், வேதசந்தூர், பாளயம் எரியோடு பிர்காக்கள், வட மதுரை பிர்காவில் சில கிராமங்கள்.	1	..	..

சென்னைச் சட்ட சபை (Madras Legislative Assembly) தொகுதிகள்

தொகுதியின் பெயர்	தொகுதியின் விஸ்தீர்ணம்	மொத்த ஸ்தானங்கள்	ஒதுக்கப் பட்டவை: ஷெடியூல் ஜாதியினருக்கு	ஒதுக்கப் பட்டவை: ஷெடியூல் மலைவாசிகளுக்கு
	சென்னை			
வண்ணாரப் பேட்டை	புதுவண்ணாரப்பேட்டை, ராயபுரம், சிங்காரத் தோட்டம், சஞ்சீவிராயன் பேட்டை, கொருக்குப் பேட்டை வார்டுகள்.	1	..	..
ஹார்பர்	பெத்துநாயக்கன் பேட்டை. ஏழுகிணறு, அம்மன்கோயில், முத்தயால்பெட், ஹார்பர், கச்சாலேச்வரர் கோயில், கொத்த வால்சாவடி, சாவுகார் பேட்டை, டிவல்யன்பேசின், கோட்டை வார்டுகள்.	1	..	..
சூளை	பேசின்பிரிட்ஜ், சூளை, புளியாந்தோப்பு, கொசப்பெட், பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம், அயனாவரம், புரசவாக்கம், வியாசர்பாடி வார்டுகள்.	2	1	..
ஆயிரம் விளக்கு	தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, ஆயிரம் விளக்கு, கோடம் பாக்கம், நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம் வார்டுகள்.	1	..	..
எழும்பூர்	இடப்பாளயம், பார்க்டவுன், பெரியமெட், வேப்பேரி, எழும்பூர், கோமளேசுவரன் பேட்டை, சிந்தாத்திரிப் பேட்டை, புதுப்பாக்கம் வார்டுகள்.	1	..	..
திருவல்லிக் கேணி	மேப்பியர் பார்க், திருவட்டீசுவரன்பேட்டை, சேப்பாக், திருவல்லிக்கேணி, ஜாம்பஜார், மீர்சாகிப்பேட்டை வார்டுகள்.	1	..	..

மயிலாப்பூர்	மயிலாப்பூர் வடக்கு, தெற்கு, அடையாறு, கிண்டி, சைதாப்பேட்டை, தியாகராயநகர் வடக்கு, தெற்கு வார்டுகள்.	1	..	..
	செங்கல்பட்டு ஜில்லா			
பொன்னேரி	பொன்னேரி தாலுகா.	2	1	..
திருவள்ளூர்	திருவள்ளூர் தாலுகா.	2	1	..
சைதாப்பேட்டை	சைதாப்பேட்டை தாலுகாவும் குன்னத்தூர் பிர்காவும்.	2	1	..
ஸ்ரீபெரும்பூதூர்	ஸ்ரீபெரும்பூதூர் தாலுகா (குன்னத்தூர், செரப்பாஞ்சேரி பிர்காக்கள் நீங்கலாக.)	1	..	..
திருப்போரூர்	திருப்போரூர், கூடுவாஞ்சேரி பிர்காக்கள், செரப்பாஞ்சேரி பிர்கா, வாலாஜாபாத் பிர்கா.	1	..	..
செங்கல்பட்டு	செங்கல்பட்டு தாலுகா (கூடுவாஞ்சேரி, திருப்போரூர் பிர்காக்கள் நீங்கலாக).	1	..	..
மதுராந்தகம்	மதுராந்தகம் தாலுகா.	2	1	..
உத்திரமேரூர்	காஞ்சீபுரம் தாலுகா, (காஞ்சீபுரம், வாலாஜாபாத் பரந்தூர் பிர்காக்கள் நீங்கலாக—ஆனல் காஞ்சீபுரம் பிர்காவில் சில கிராமங்கள் உண்டு).	1	..	..
காஞ்சீபுரம்	காஞ்சீபுரம் பிர்கா (சில கிராமங்கள் நீங்கலாக) பரந்தூர் பிர்கா.	1	..	..
	வடஆர்காடு ஜில்லா			
குடியாத்தம்	குடியாத்தம் தாலுகா (காட்பாடி பிர்கா நீங்கலாக).	2	1	..
திருப்பத்தூர்	கண்டிவி, கொரட்டி, திருப்பத்தூர் பிர்காக்கள்.	1	..	..
வாணியம்பாடி	நாட்டரம்பள்ளி, வாணியம்பாடி, அலங்கய்யம் பிர்காக்கள்; திருப்பத்தூர் தாலுகாவில் மலை கிராமங்கள்.	1	..	..
வேலூர்	வேலூர் தாலுகா.	2	1	..
அரக்கோணம்	அரக்கோணம், பொன்னபாக்கம், கிழவீதி பிர்காக்கள்.	1	..	..
ஷோலிங்கர்	பனஜி, காவேரிப்பாக்கம், ஷோலிங்கர் பிர்காக்கள்.	1	..	..
ராணிப்பேட்டை	காட்பாடி, ராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை பிர்காக்கள்.	1	..	..
ஆற்காடு	ஆற்காடு, திமிரி, காலவாய் பிர்காக்கள்.	1	..	..
வந்தவாசி	வந்தவாசி தாலுகா, அனக்காவூர், வக்கடை பிர்காக்கள்.	2	1	..
செய்யாறு	கஸ்பா செய்யாறு, பருங்கத்தூர், தேகுரை, தூசி, வேம்பாக்கம் பிர்காக்கள்.	1	..	..
திருவண்ணாமலை	திருவண்ணாமலை தாலுகாவும், தண்டரம்பதி பிர்காவும்.	2	1	..
செங்கம்	செங்கம், பாதியக்கிரஹாரம், தனிப்பாதி பிர்காக்கள்.	1	..	..
கலசப்பாக்கம்	கடலுடி, கலசப்பாக்கம், மண்டகளத்தூர், தச்சம்பூதி பிர்காக்கள்.	1	..	..
போலூர்	போலூர், சந்தவாசல், கண்ணமங்கலம் பிர்காக்கள்.	1	..	..
ஆரணி	ஆரணி தாலுகா (கண்ணமங்கலம் பிர்கா நீங்கலாக).	1	..	..
	சேலம் ஜில்லா			
நாமக்கல்	புதுச்சத்திரம், சேந்தமங்கலம், நாமக்கல், மோகனூர் பிர்காக்கள்.	2	1	..
பரமத்தி	பரமத்தி, கபிலமலை பிர்காக்களும் திருச்செங்கோடு பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
திருச்செங்கோடு	திருச்செங்கோடு தாலுகா (இடப்பாடி பிர்காவும், திருச்செங்கோடு பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக).	2	1	..
இடப்பாடி	இடப்பாடி, மேட்டூர், நங்கவல்லி பிர்காக்கள்.	1	..	..
ராசிபுரம்	ராசிபுரம், வெண்ணந்தூர் பிர்காக்கள்.	1	..	..
ஆத்தூர்	நாமகிரிப்பேட்டை, எதப்பூர், ஆத்தூர் பிர்காக்கள் (ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக.)	1	..	..

தலவாசல்	தலவாசல், வீராங்கனூர், கங்கவல்லி பிர்காக்களும் ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
சேலம் டவுன்	சேலம் முனிசிபாலிடி.	1	..	..
சேலம் ரூரல்	சேலம் பிர்கா (சேலம் முனிசிபாலிடி நீங்கலாக) வீரபாண்டி பிர்கா.	1	..	..
வலப்பாடி	கரிப்பட்டி, வலப்பாடி, பனமரத்துப்பட்டி பிர்காக்களும் ஏற்காடு சப்தாலூகாவும்.	1	..	..
ஹரூர்	ஹரூர் தாலூகா, பர்கூர், சாத்தூர், மத்தூர் பிர்காக்கள்.	2	1	..
ஓமலூர்	ஓமலூர், தாராமங்கலம் பிர்காக்கள்.	1	..	..
மெச்சேரி	மெச்சேரி, கடயம்பட்டி நல்லம்பள்ளி பிர்காக்கள்.	1	..	..
தர்மபுரி	தர்மபுரி பிர்கா (தர்மபுரி மிட்டா கிராமம் நீங்கலாக) கரிமங்கலம் பிர்கா, பாலக்கோடு பிர்காவில் சில கிராமங்கள்.	1	..	..
பெண்ணகரம்	பெண்ணகரம், இந்தூர் பாலக்கோடு பிர்காக்கள் (பாலக்கோடு பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
கிருஷ்ணகிரி	காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி, பர்கூர் பிர்காக்கள்.	1	..	..
உத்தன்பள்ளி	வேப்பனப்பள்ளி, குண்டரப் பள்ளி, உத்தனப்பள்ளி பிர்காக்கள்.	1	..	..
ஹோசூர்	ஹோசூர் தாலூகா (உத்தனப்பள்ளி பிர்கா நீங்கலாக.)	1	..	..

கோயமுத்தூர் ஜில்லா

கொள்ளேகாலம்	கொள்ளேகாலம் தாலூகா.	1	..	..
பவானி	அம்மாப்பேட்டை, குச்சி, பவானி பிர்காக்கள்.	1	..	..
கோபி செட்டிப் பாளையம்	ஆண்டியூர் பிர்கா, கோபி செட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக பாக்கி, குகலூர் பிர்கா.	1	..	..
நம்பியூர்	வாணி புத்தூர், நம்பியூர், சாலிய மங்கலம், தலவாடை, புளியம்பட்டி பிர்காக்கள், கோபிசெட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள்; சேவூர் பிர்கா.	2	1	..
மேட்டுப்பாளயம்	அன்னூர், சிறுமுகை, மேட்டுப் பாளயம் பிர்காக்கள்.	1	..	..
தொண்டு முத்தூர்.	பெரிய நாயக்கன் பாளயம், சர்க்கார் சாமாக்குளம், தெண்டு முத்தூர் பிர்காக்கள்.	1	..	..
கோயமுத்தூர்	கோயமுத்தூர் முனிசிபாலிடி.	1	..	..
மதுக்கரை	கோயமுத்தூர் பிர்கா (கோயமுத்தூர் முனிசிபாலிடி நீங்கலாக); மதுக்கரை பிர்கா.	1	..	..
பொள்ளாச்சி	பொள்ளாச்சி, கோலாரப்பட்டி, ஆனைமலை, பெரிய வலவாடி, பிர்காக்கள்.	2	1	..
கோவில்பாளயம்	கிணத்துக்கடவு, கோவில் பாளயம், வாரப்பட்டி பிர்காக்கள்.	1	..	..
உடுமலைப் பேட்டை	உடுமலைப் பேட்டை, குடிமங்கலம், மடத்துக் குளம், பிர்காக்களும் குண்டாடம் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
தாராபுரம்	தாராபுரம், கொழுமங்குழி, குண்டாடம் பிர்காக்கள் (இதில் சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
காங்கயம்	காங்கயம், மூளனூர் பிர்காக்களும் வெள்ள கோவில் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
கொடுமுடி	வெள்ளக்கோவில் பிர்கா, (சில கிராமங்கள் நீங்கலாக) சிவகிரி, கொடுமுடி பிர்காக்களும்.	1	..	..
ஈரோடு	ஈரோடு, பெருந்துறை பிர்காக்கள்.	1	..	..
ஊத்துக்குழி	மொடக் குறிச்சி, சென்னிமலை, ஊத்துக்குழி பிர்காக்கள்.	1	..	..
திருப்பூர்	திருப்பூர் தாலூகா (வாரப்பட்டி பிர்கா நீங்கலாக); அவனாசி பிர்கா.	2	1	..

தென் ஆற்காடு ஜில்லா

மேல்மலயனூர்	மேல்மலயனூர், சர்த்தம்பாடி, மேலலக்கூர் பிர்காக்கள்	1	..	..
செஞ்சி	சத்தியமங்கலம், செஞ்சி, வல்லம் பிர்காக்கள்	1	..	..
திண்டிவனம்	திண்டிவனம் தாலுகா	2	1	..
விக்கிரவாண்டி	விக்கிரவாண்டி, கனெ, கஞ்சனூர் பிர்காக்கள்	1	..	..
விழுப்புரம்	விழுப்புரம், வளவனூர், கண்டமங்கலம் பிர்காக்கள்	1	..	..
திருக்கோயிலூர்	திருக்கோயிலூர் தாலுகா, பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள்	2	1	..
உளுந்தூர் பேட்டை	உளுந்தூர்பேட்டை சப்தாலுகா	1	..	..
கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி தாலூகா (தியாகதுர்க்கம் பிர்காவும் பாக்கம் பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக).	2	1	..
விருத்தாசலம்	விருத்தாசலம் தாலுகா (கம்மாபுரம், ஊத்தங்கால்மங்கலம் நீங்கலாக); தியாகதுர்க்கம் பிர்காவும்.	2	1	..
பண்ருட்டி	பண்ருட்டி சப் தாலுகா	1	..	..
கூடலூர்	கூடலூர் தாலுகா டிவிஷன், கம்மாபுரம், ஊத்தங்கால் மங்கலம் பிர்காக்கள்	2	1	..
புவனகிரி	புவனகிரி, சேத்தியாத்தோப்பு பிர்காக்கள்	1	..	..
சிதம்பரம்	சிதம்பரம் தாலுகா (புவனகிரி, சேத்தியாத்தோப்பு பிர்காக்கள் நீங்கலாக)	2	1	..

தஞ்சாவூர் ஜில்லா

அரந்தாங்கி	அரந்தாங்கி தாலுகா	1	..	..
அதிராம் பட்டணம்	பெருமகளூர், சேதுபாவா சத்திரம், திருச்சிற்றம்பலம், பேராவூருணி, அதிராம்பட்டணம் பிர்காக்கள்	1	..	..
பட்டுக்கோட்டை	பட்டுக்கோட்டை, மதுக்கூர், தொண்டராம்பட்டி, காவாலிப் பட்டி, சில்லத்தூர் பிர்காக்கள்	1	..	..
தஞ்சாவூர்	தஞ்சாவூர், மூர்த்தியம்பாள்புரம், ஒரத்தநாடு பிர்காக்கள்	1	..	..
வல்லம்	திருக்காட்டுப்பள்ளி, சிங்கிப்பட்டி, வல்லம், உழவூர், கந்தர்வக் கோட்டை.	1	..	..
பாபநாசம்	பாபநாசம் தாலுகாவும் திருவையாறு நடுக்காவேரி பிர்காக்களும்.	2	1	..
கும்பகோணம்	கும்பகோணம், சோழபுரம் பிர்காக்கள்	1	..	..
ஆடுதுறை	திருப்பனந்தாள், ஆடுதுறை, பந்தநல்லூர் பிர்காக்கள்	1	..	..
மாயூரம்	மாயூரம் தாலுகா	2	1	..
சீர்காழி	சீர்காழி தாலுகா	1	..	..
நன்னிலம்	நன்னிலம் தாலுகாவும் நாச்சியார்கோவில் பிர்காவும்	2	1	..
மன்னார்குடி	மன்னார்குடி, வடுவூர், பாலையூர் நாச்சிகுளம், திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம் பிர்காக்கள்	2	1	..
நீடாமங்கலம்	நீடாமங்கலம், சாத்தனூர், கோட்டூர் ஆலத்தம்பாடி பிர்காக்கள்.	1	..	..
நாகபட்டினம்	நாகப்பட்டினம் தாலுகாவும் தலைஞாயிறு பிர்காவும்.	2	1	..

திருச்சிராப்பள்ளி ஜில்லா

புதுக்கோட்டை	ஆலங்குடி தாலுகா.	1	..	..
திருமயம்	திருமயம், குளத்தூர் தாலுகாக்கள், இலுப்பூர் பிர்கா.	2	1	..
அரவக்குறிச்சி	பரமத்தி, சின்னதாராபுரம், அரவக்குறிச்சி பிர்காக்களும் புகலூர் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
கரூர்	கரூர், வெள்ளியானை, புகளூர் (சில கிராமங்கள் நீங்கலாக); கட்டளை, குழித்தலை, பஞ்சப்பட்டி பிர்காக்கள்.	2	1	..

மணப்பாறை	மணப்பாறை சப் தாலூகா (மணப்பாறை பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
திருச்சி (தெற்கு)	தேகமலை பிர்கா, மணப்பாறை பிர்காவில் சில கிராமங்கள்; திருவரம்பூர், மணிகண்டம் பிர்காக்கள்	1	..	..
திருச்சி (வடக்கு)	பொன்மலை காலனி, புத்தூர் சேங்குளம், வரகனேரி, அபிஷேகபுரம், கோட்டப்பட்டு கிராமங்கள் திருச்சி முனிசிபாலிடிக்குள் கண்டோன்மெண்ட், பீமநகர், புத்தூர், தென்னூர், கோட்டை, தாராநல்லூர், வரகனேரி, பாலக்கரை, மேலப்புதூர், கள்ளக்குழி.	1	..	..
ஸ்ரீரங்கம்	பாண்டமங்கலம் கிராமம், உறையூர், சிந்தாமணி, தேவதானம், ராக்போர்ட், ஸ்ரீரங்கம் பிர்கா (ஸ்ரீரங்கம் முனிசிபாலிடி உள்பட); ஆண்டாநல்லூர் பிர்கா.	1	..	..
முசிறி	முசிறி, தொட்டியம் பிர்காக்களும், தாத்தய்யங்கார் பேட்டை பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
துறையூர்	உப்புலியாபுரம், கண்ணனூர் பிர்காக்கள்; சில கிராமங்கள் தவிர பாக்கி தாத்தய்யங்கார் பேட்டை பிர்கா.	1	..	..
மணச்சநல்லூர்	புலிவலம் பிர்கா; மணச்சநல்லூர் கரியமாணிக்கம் பிர்காக்கள்.	1	..	..
லால்குடி	லால்குடி தாலூகா (மணச்சநல்லூர், கரியமாணிக்கம் புள்ளம்பாடி பிர்காக்கள் நீங்கலாக).	1	..	..
பெரம்பலூர்	பெரம்பலூர் தாலூகா.	2	1	..
அரியலூர்	புள்ளம்பாடி பிர்கா; அரியலூர், திருமலவாடி பிர்காக்கள்	1	..	..
ஜெயங்கொண்டம்	ஜெயங்கொண்டம் (உடையார் பாளயம்) தாலூகா (அரியலூர் திருமலவாடி பிர்காக்கள் நீங்கலாக)	2	1	..

மதுரை ஜில்லா

பழநி	கரிக்கடவு, பழநி பிர்காக்கள்.	1	..	..
ஒட்டன்சத்திரம்	தோப்பம்பட்டி, கள்ளிமண்டயம், ஒட்டன் சத்திரம் பிர்காக்கள்.	1	..	..
ஆத்தூர்	ஆத்தூர் பிர்கா	1	..	..
திண்டுக்கல்	திண்டுக்கல் பிர்காவும் வட மதுரை பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
வேட சந்தூர்	வேடசந்தூர், பலகம், எரியோடு பிர்காக்கள்.	1	..	..
வட மதுரை	சாணாரப்பள்ளி, வடக்கு நத்தம், தெற்கு நத்தம்; வட மதுரை பிர்கா (சில கிராமங்கள் தவிர).	1	..	..
மேலூர்	மதுரை தாலூகா (மதுரை முனிசிபாலிடி நீங்கலாக); மேலூர் தாலூகா (வடக்கு நத்தம், தெற்கு நத்தம் நீங்கலாக).	2	1	..
மதுரை (வடக்கு)	மதுரை முனிசிபாலிட்டியின் ஒரு பாகம்.	1	..	..
மதுரை (தெற்கு)	மதுரை முனிசிபாலிட்டியின் மற்றொரு பாகம்.	1	..	..
நிலக்கோட்டை	நிலக்கோட்டை தாலூகா, தேவதானப்பட்டி பிர்கா.	2	1	..
பெரிய குளம்	கோடைக்கானல் தாலூகா, தென்கரை, தேனீ, ஆண்டிப்பட்டி பிர்காக்கள்; உசிலம்பட்டி பிர்கா.	2	1	..
உத்தம பாளயம்	போடிநாயக்கனூர், உத்தமபாளயம் பிர்காக்கள் (சில கிராமங்கள் நீங்கலாக).	1	..	..
கம்பம்	கம்பம் பிர்காவும் உத்தம பாளயம் பிர்காவில் சில கிராமங்களும்.	1	..	..
சேடப்பட்டி	சேடப்பட்டி, பன்னிகுண்டு, வளந்தூர் பிர்காக்கள்.	1	..	..
திருமங்கலம்	திருமங்கலம், கள்ளிகுடி, கல்லுப்பட்டி பிர்காக்கள்.	1	..	..

(தொடரும்)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செயயப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயஙகளையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

பொல்லாத மரங்கள்

ஆதாரம்:— ஒரிசா ஹைகோர்ட் - ஆல் இந்தியா ரிபோர்ட்டர். 1951 ஒரிசா - 181.

நீதிபதி:— பாணிக்ராஹி அவர்கள்.

மரஞ்செடிகளால் மனித சமூகத்திற்கு எவ்வளவோ நன்மைகள் உண்டானாலும் சிற்சில மரங்கள் மக்களுக்குள் வீண் விவகாரங்களை உற்பத்தி செய்தும் விடுகின்றன. நீங்கள் உங்களுடைய நிலத்தின் வேலி அல்லது கரை ஓரமாக ஒரு புளியமரம் அல்லது மாமரம் வைத்துப் பயிர் செய்வதாக வைத்துக் கொள்வோம். அதை வளர்க்க எவ்வளவோ பிரயாசைப்படுகின்றீர்கள். அம்மரம் கொழுகொழுவென்று வளரும்போது உங்களுடைய நிலத்திற்குள்ளேயேதான் வளர்ந்து வருகின்றதென்ற நிச்சயமில்லை. அது இஷ்டப்பட்டால் உங்கள் வேலியையும் தாண்டி, அதன் அடி மரத்தின் பாதி உங்களுடைய பூமியிலும் மற்றொரு பாகம் உங்கள் பக்கத்து நிலக்காரரின் பூமியிலும் அமையும்படி பருத்துக்கொண்டே போகலாம். அதன் வேர்கள் உங்கள் நிலத்திற்குள் செல்வது போலவே பக்கத்து நிலத்திலும் பூமிக்குள் ஊடுருவிப்பரவலாம். ஆனால் இது கண்ணுக்குத் தெரியாது. கண்ணுக்குத் தெரியும்படியாக அதன் கிளைகள் உங்கள் பக்கத்து நிலத்தின்மீதும் பரவலாம். உங்கள் பககத்து நிலக்காரரும் நீங்களும் இருவரும் விட்டுக் கொடுக்கும் தன்மையுள்ளவர்களாக இருந்தால் ஒன்றும் பிரமாதமான விபரீதம் ஏற்பட்டு விடாது. அப்படியில்லாமல் ஒருவருக்கொருவர் இம்மரத்தின்மீதுள்ள ஆசையாலோ வெறுப்பாலோ அவரவருடைய பாத்தியாபாத்தியங்களை வற்புறுத்த ஆரம்பித்தால் அம்மரம் வளருவதற்குமேல் ஜரூராகவே உங்கள் விவகாரங்களும் வளரும்.

இவ்விதம் இருவர் நிலத்திலும் உள்ள மரத்தைப்பற்றிக் கீழே கண்ட பிரச்னைகள் எழுகின்றன. அம்மரம் யாருடையது? அடிமரம் இருவர் நிலத்திலும் இருப்பதால்தான் இப்பிரச்னை. முழு மரத்தையும் ஒருவரே வெட்டலாமா? அப்படியானால் யார் வெட்டப்பாத்தியமுள்ளவர்? அதில் காய்க்கும் காய் கனிகள் யாருடையவை? அதன் கிளைகளை யார் வெட்டலாம்? வெட்டப்பட்ட கிளைகள் யாருடையவை? — என்ற சந்தேகங்கள் உண்டாகின்றன.

சமீபத்தில் ஒரிஸா ஹைகோர்ட்டில் நடந்த ஒரு வழக்கில் இப்பிரச்னைகள் எழுந்தன. ஒருவர் தம் நிலத்தின் ஓரமாக, பொழி வரப்பினருகில் ஓர் மூங்கில் கொத்து வைத்தார். இது நாளடைவில் வளர்ந்து வரப்பையும் தாண்டி அடுத்த நிலத்திலும் பரவி அங்கேயும் மூங்கில் கழிகள் கிளம்பின. மூங்கில் கொத்து வைத்தவர் இறந்த பிறகு அவருடைய மகன் அடுத்த நிலத்தில் பரவியிருக்கும் 60 மூங்கில் கழிகளை முன்பு செய்து வந்ததுபோலவே வெட்டி எடுத்துக்கொண்டார். ஆனால் அடுத்த நிலத்தின் சொந்தக்காரர் இதை அச்சமயம் ஏனோ அங்கீகரிக்கவில்லை. முன்சீப் கோர்ட்டில் மூங்கில் கழி வெட்டியவர்மீது அவர் தாவா செய்தார். பிரதிவாதி வெட்டி எடுத்துப்போன மூங்கில்

கள் தம் நிலத்தில் இருந்தவை என்றும், அவை முழுதும் தமக்குத்தான் சொந்தமென்றும் அதன் கிரயம் ரூபாய் 30 தமக்குக் கிடைக்க வேண்டுமென்றும்தான் வாதியின் தாவா. இனி தம் நிலத்தில் பிரதிவாதி பிரவேசிக்கக் கூடாதென்று தடை செய்யப்படவேண்டுமென் றும் கேட்டிருந்தார். டிஸ்டிரிக்ட் முன்சீப் இந்தத் தாவாவைத் தள்ளிவிட்டார். ஏனென்றால் ஆரம்பத்தில் மூங்கில் வைத்துப் பயிர் செய்தது பிரதிவாதியின் தகப்பனுர்தான் என்றும், நாளடைவில் இதன் வேர்கள் வாதியின் நிலத்திற்குப் பரவி அங்கேயும் மூங்கில் கழிகள் கிளம்பி வந்தனவென்றும்; இக்கழிகளை 20 வருடங்களுக்கு மேலாகவே பிரதிவாதியின் தகப்பனுரும் பிரதிவாதியும்தான் வெட்டி வந்தன ரென்றும், ஆகையால் வாதிக்கு ஏதாவது பாத்தியம் இருந்தாலும், அது காலாவதியாகி விட்டதென்றும் அவர் தீர்ப்பில் காரணம் காட்டியிருந்தார். இதன்மீது சப்கோர்ட்டில் அப்பீல் நடந்தது. அப்பீலில் சப்ஜட்ஜ் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை ஒரு குறுக்குவழியாக மாற்றினுர். வாதியின் நிலத்தில் பிரதிவாதி பிரவேசித்ததே தவறென்றும், மூங்கில் கொத்துக்கள் பிரதிவாதியினுடையதாக இருந்தாலும் அவர் பிறர் நிலத்தில் பிரவேசிக்கக் கூடாதென்றும் தடை உத்தரவு விதித்து ரூபாய் 30 வாதிக்கு நஷ்டம் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். இந்த ரூபாய் 30 மூங்கிலின் கிரயமல்ல; வாதியின் நிலத்தில் பிரதிவாதி சட்ட விரோதமாக உள்ளே பிரவேசித்ததால் ஏற்பட்ட நஷ்ட ஈடு என்று சப்ஜட்ஜ் குறிப்பிட்டிருந்தார்.

இதன்மீது ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டது. உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான புராதன இந்து சட்டத்தையும், பிரஞ்சு சட்டத்தையும், ஆங்கில சட்டத்தையும் ஆராய்ச்சி செய்து கடைசியில் வாதி, பிரதிவாதி இருவருடைய நிலங்களிலும் வேர் பரவி ஊட்ட மடைந்து இருவர் நிலங்களிலுமுள்ள மூங்கில் கொத்து, இரு நிலக்காரர்களுக்கும் சமபாத்தியமுள்ளதென்றும் பிரதிவாதி ரூபாய் 30 மதிப்புள்ள மூங்கில்களை வெட்டியதால் அதில் பாதி, வாதிக்கும், பாதி பிரதிவாதிக்கும் பாத்தியமுள்ளதென்றும் ஆகையால் ஒரு பாதியின் கிரயம் ரூபாய் 15 வாதிக்குக் கிடைக்கும்படிக்கும் தீர்ப்பளித்தார். இது சம்பந்தமான சட்டமே மிகத் தெளிவாக இல்லாததால் ஹைகோர்ட் வரையில் அவரவர் செலவு செய்த தொகைகளை அவ்ரவரே பொறுத்துக் கொள்ளும்படியும் தீர்ப்பளித்தனர்.

இனி இது சம்பந்தமான சட்ட நுட்பங்களைக் கவனிப்போம். ஒருவர் நிலத்திலிருக்கும் மரத்தின் கிளைகள் அடுத்த நிலத்தின் மேலே நீட்டிக் கொண்டிருந்தால் அது அந்த அடுத்த நிலத்தின் சொந்தக்காரருக்கு ஒரு ‘உபத்திரவம்’ அல்லது ‘தொல்லை’ (nuisance) விளைவிப்பதாகவே சட்டத்தால் கருதப்படும். அடுத்த பூமியின் சொந்தக்காரர் அந்த உபத்திரவத்தை நீக்கும்படி மரத்தின் சொந்தக்காரருக்கு ‘நோட்டீஸ்’ கொடுத்தும் அவர் அலட்சியமாக இருந்தால், அடுத்த நிலக்காரர் தம் நிலங்களின்மீது பரவியுள்ள கிளைகளைத் தாமே வெட்டி விடலாம். நோட்டீஸ் கொடுக்காமல்கூட வெட்டப் பாத்தியமுண்டென்றும் சில ஆங்கில நீதிபதிகள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர். தாமே வெட்டாவிட்டாலும் கோர்ட்டில் தாவா செய்தும் அக்கிளைகளை வெட்டும்படி செய்யலாம். கிளைகளை மட்டில் அவர் வெட்டலாமே ஒழிய அப்படி வெட்டப்பட்ட கிளைகளை அவரே எடுத்துக் கொள்ள உரிமை கிடையாது. அக்கிளைகள் அவருடையதல்ல. அவை மரத்தின் சொந்தக்காரருடையவையே. அதைப்போலவே அக்கிளைகளில் இருக்கும் காய் பழம் முதலியவைகளிலும் பக்கத்து பூமிக்காரருக்குப் பாத்தியமில்லை. பரவும் கிளைகளைப் போலவேதான் அடுத்த நிலத்திற்குப் பரவும் வேர்களும். இதவும் ஒரு உபத்திரவம் அல்லது தொல்லை (nuisance) தான். அடுத்த நிலக்காரர் தமக்குத் தொல்லை கொடுக்கும் வேர்களை முன் சொன்னபடியே அகற்றலாம். ஒருவர் நிலத்திலுள்ள மரங்கள் அடுத்த நிலக்காரர் நிலத்தின்மீது எவ்வளவு வருடங்கள் நீட்டிக்கொண்டிருந்தாலும் படர்ந்தாலும் அதனுல் அம்மரக்கிளைகள் அப்படியே நீட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்ருவது அதை அடுத்த நிலக்காரர் சகித்துக்கொண்டிருக்க

வேண்டுமென்று வற்புறுத்தவாவது மரத்தின் சொந்தக்காரருக்கு எவ்விதப் பாத்தியமும் சித்தித்து விடாது. பரவும் கிளைகளின் கீழ் உள்ள பிறர் நிலத்திலும் மரத்தின் சொந்தக்காரருக்கு எவ்வித அனுபோக பாத்தியமும் ஒருநாளும் ஏற்படாது. வேர்களுக்கும் அதே சட்டம்தான். அடுத்த நிலக்காரர் எப்பொழுது வேண்டுமானுலும் இந்த உபத்திரவம் அல்லது தொல்லையை மேற்கண்ட விதம் அகற்றிக்கொள்ள உரிமை உண்டு. இதற்குக் காலாவதி ஒன்றுமில்லை.

இது ஒருவர் நிலத்தில் மட்டும் வளர்ந்து பிறர் நிலத்தின் மேலோ, கீழோ பரவும் மரத்தைப் பற்றியதே. அப்படியில்லாமல் ஒரு மரம் இருவர்களுடைய நிலங்களுக்கு நடுவே, பொழியிலோ, வேலியிலோ, வரப்பிலோ, வளர்ந்து அதன் அடிப்பாகம் இருவர் நிலங்களிலும் இருந்து அதன் வேர்கள் இருவர்களுடைய நிலங்களிலிருந்தும் ஊட்டம் பெற்றுல் அதற்குச் சட்டம் வேறு. அம்மரம் அதன் கிளைகள், காய், பழம் எல்லாம் இருவருக்கும் சம பாத்தியமும் உரிமையும் உள்ள ஒரு பொதுச் சொத்தாகும்— என்று விவகாரமயூகம் என்ற இந்து சட்ட நூலிலும் 'கோட் நெப்போலியன்' என்ற பிரஞ்சு தேசச் சட்டத்திலும் இருப்பதை இவ்வழக்கில் உயர்நீதிபதி அவர்கள் தழுவி இத்தீர்ப்பளித்தனர். இவ்வழக்கில், மூங்கில் கொத்துக்கள் யாரால் முதல் முதலில் வைக்கப்பட்டிருந்தாலும், அது இருவருடைய நிலங்களிலும் பரவி வளர்ந்திருந்ததால், அவை எல்லாம் இரு நிலக்காரர்களுக்கும் பொதுவான சொத்தாகப் பாவிக்கப்பட்டு முன் சொன்னபடி தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கை மூன்று கோர்ட்டுகள் வரை வளரவிட்ட மரங்கள்! பொல்லாத மரங்கள்!

* * *

ஒரு பெண்ணை அவமானப்படுத்திய இளைஞனின் முகத்தில் கரிபூசி, அவனைச் செருப்பாலடித்து, தெருவில் நடத்திச் சென்ற பஞ்சாயத்தார்கள் குற்றவாளிகளா?

ஆதாரம்:— அலகாபாத் ஹைகோர்ட் - ஆல் இந்தியா ரிபோர்ட்டர்-1951 அலகாபாத் - 500.

ஒருவர் குற்றம் செய்தால், அவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டியவை சட்டத்தால் அமைக்கப்பட்டுள்ள நீதி மன்றங்களே. அப்படியில்லாமல், குற்றம் செய்தவரை எந்தத் தனி நபரும் தண்டிக்கலாம் என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்றே பொதுவாகச் சொல்லலாம். கோர்ட்டுகள் செய்யவேண்டிய இக்காரியத்தை ஒரு தனி நபரோ ஒரு பஞ்சாயத்தோ மேற்கொண்டு குற்றம் செய்தவரைத் தாங்களே தண்டித்தால் அதுவே ஒரு குற்றமாகும். ஆனுல் குற்றங்களைப் பற்றிய சட்டத்தில் சில விதி விலக்குகளும் இருக்கின்றன. அவ்வித விதி விலக்குகளுக்கு இவ்வழக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

ஒரு கிராமவாசி இளைஞன் — வேறு ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் ஆபாசமான முறையில் நடந்து கொண்டுவிட்டான். அப்பெண்ணின் தகப்பனும் அவளுடைய ஜாதியைச் சேர்ந்த சுமார் 200 நபர்களும் இச்சம்பவத்தால் கோபம் கொண்டு, கூட்டம் கூடி, பெண்ணை அவமானப்படுத்திய இளைஞனையும் பிடித்து விட்டார்கள்; அவனைச் சும்மா விடக் கூடாதென்றும் தீர்மானித்து விட்டனர். என்ன செய்வதாக எண்ணியிருந்தனரோ தெரியாது. இளைஞனின்பாடு ஆபத்தாகவே இருந்தது. இந்நிலைமையில் அக்கிராமவாசிகளில் முக்கியமான சிலர் குறுக்கிட்டு ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தினர். அவர்கள் எது செய்தாலும் சரி என்று இளைஞனும் ஒப்புக்கொண்டு கையெழுத்தும் செய்து கொடுத்தான். பஞ்சாயத்தார்கள் செய்தது இது தான். போக்கிரித்தனமாக நடந்து கொண்ட அந்த இளைஞனுடைய முகத்தில் கரியைப் பூசி, அவனைச் செருப்பால் அடித்தவாறே அக்கிராமத்தைச் சுற்றி அழைத்துக் கொண்டு போகும்படி செய்தனர். அவன் செய்த அடாத காரியத்துக்கு ஏற்ற தண்டனை தான்! அச்சமயத்தில் வேறு வழியில்லாமல் அதைப் பொறுத்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் பின்பு அப்பஞ்சாயத்தார்கள் தன்னை அடித்து அவமானப்படுத்தி விட்டார்கள் என்று அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர்ந்தான். அதை முதலில் விசாரித்த மாஜிஸ்ட்ரேட், அப்பஞ்சாயத்தார்கள் செய்தது குற்றம் தான் என்று அவர்களைத் தண்டித்தார். பஞ்சாயத்

தார்கள் செஷன்ஸ் ஜட்ஜுக்கு அப்பீல் செய்தனர். அப்பீலில் இவர்கள் விடுதலை அடைந்தனர். அதன் பேரில் எற்பட்ட ஹைகோர்ட் ரிவிஷனிலும் செஷன் ஜட்ஜ் செய்த தீர்ப்பே சரி என்று அலகாபாத் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

இந்தியன் பீனல் கோட் என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தில், மற்றச் சந்தர்ப்பங்களில் குற்றமாகும் செய்கைகள் சிற் சில சந்தர்ப்பங்களில் குற்றமாகப் பாவிக்கப்பட மாட்டாதென்று சில விதி விலக்குகள் இருக்கின்றன. ஒருவர் குற்றம் செய்யவேண்டுமென்ற எண்ணமில்லாமல், நல்லெண்ணத்துடன் ஒருவருடைய சரீரத்திற்கோ சொத்துக்கோ வேறு கெடுதி வராமல் தடுப்பதற்காகச் செய்யும் எந்தச் செய்கையும் குற்றமாகாது. ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஒருவர் வேறு ஒருவருடைய வீட்டின் கூரையை யாதொரு பாத்தியமுமில்லாமல் பிரித்துக் கீழே தள்ளி விடுவது ஒரு பெரிய குற்றம் தான்; ஆனல் ஒரு பெரிய நெருப்புப் பிடித்துக்கொண்ட போது அந்நெருப்பு வேறு வீடுகளுக்குப் பரவாமல் தடுக்கவும் அங்கே வசிப்பவர்களின் உயிரைக் காப்பாற்றவும் எண்ணங்கொண்டு அவர் அப்படிச் செய்தால் அது குற்றமாகாது. (இந்தியன் பீனல் கோடு - செக்ஷன் 81). மேலும் 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவருடைய சம்மதத்தின் பேரில் அவருக்கு எவ்விதத் துன்பம் அல்லது கெடுதியை வேறு ஒருவர் செய்வது குற்றமாகாது. (ஆனல் சாவு அல்லது கடும் துன்பம் நேரக்கூடிய செய்கைகளாக இருக்கக் கூடாது.) துன்பம் அடைபவருடைய சம்மதம் வியக்தமாக இருந்தாலும் சரி, மறைமுகமாக இருந்தாலும் சரி இந்த விதி விலக்கு உண்டு. உதாரணமாக: இரண்டு பயில்வான்கள் (18 வயது பூர்த்தியானவர்கள்) ஒரு குஸ்திப் போட்டி நடத்துகின்றார்கள். ஆட்ட விதிகளின் படி நடக்கும் போது ஒரு பயில்வானுக்கு உடம்பில் காயம் எற்படுகின்றது. காயம் எற்படுத்தியவர் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை. எனென்றால் இருவர்களும் மறைமுகமாக இவ்விதக் காயம் எற்படுவதற்கு சம்மதித்ததாகவே தான் கருதப்படும். (இந்தியன் பீனல்கோடு - செக்ஷன் 87). வேறு ஒரு விதி விலக்கும் இருக்கின்றது. ஒருவர் தம் நன்மைக்காகவே எவ்விதத் துன்பத்தையும் சகிக்கச் சம்மதிக்கலாம். அச்சந்தர்ப்பத்தில் அவருக்குத் துன்பம் செய்தவர் யாதொரு குற்றமும் செய்ததாக எற்படாது. உதாரணமாக — ஒரு நோயாளி தன் சரீரத்தில் ஆபரேஷன் செய்யும்படி ஒரு டாக்டரைக் கேட்டுக் கொள்ளுகிறார். அந்த ஆபரேஷன் மிக அபாயமானது. உயிர்ச்சேதம் நேர்ந்தாலும் நேரலாம். இருந்தாலும் நோயாளி சம்மதித்து, அவருடைய நன்மைக்காகவே ஒரு டாக்டர் செய்யும் ஆபரேஷனில் அந்நோயாளிக்கு என்ன கெடுதி எற்பட்டாலும், டாக்டர் யாதொரு குற்றமும் செய்தவராக மாட்டார். (இந்தியன் பீனல்கோடு — செக்ஷன் 88) இம் மூன்று விதி விலக்குகளையும் ஆதாரமாகக் கொண்டு தான் பஞ்சாயத்தார்கள் செய்த செய்கைகள் குற்றமல்ல என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். இப்பஞ்சாயத்தார்கள் அப்படிச் செய்யா விட்டால் அந்த இளைஞனுடைய உயிருக்கே அன்று ஆபத்து நேர்ந்திருக்கலாம். அவமானப் படுத்தப்பட்ட பெண்ணின் இனத்தார்கள் இச்சிறுவனை எவ்வளவோ வகையில் துன்புறுத்தி இருக்கலாம். அவனுக்கு நேரக்கூடிய இவ்வித வேறு பெரிய கெடுதிகளைத் தடுக்கும் நல்லெண்ணத்துடன் தான், அதுவும் அவனுடைய சம்மதத்தின் பேரிலேயே, பஞ்சாயத்தார்கள் அவன் முகத்தில் கரி பூசி, செருப்பாலடித்து, தெருவில் நடத்திச் சென்றார்கள். அவனுக்கு இழைக்கப்பட்ட துன்பமும் கெடுதியும் சாதாரண சந்தர்ப்பத்தில் பெரிய குற்றச் செய்கைகளாகவே தான் ஆகும். ஆனல் இவ் விசேஷ சந்தர்ப்பத்தில் அப்பஞ்சாயத்தார்களின் செய்கை குற்றமாக பாவிக்கப் படவில்லை. சட்டத்திலிருக்கும் விதி விலக்குகள் இவர்களைக் காப்பாற்றின.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

79. கேள்வி: (குழந்தைசாமி — வேலூர்) பார்ட்னர்ஷிப் ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்து நடத்திவரும் ஒரு கூட்டு வியாபாரத்திற்கு வருடம் ஒரு முறை கணக்குகளை ஆடிட்டர்கள் மூலம் தணிக்கை செய்து கொள்ளவேண்டுமென்று சட்டம் இருக்கிறதா?

பதில்: இல்லை.

80. கேள்வி: (அப்துல் சலாம் இராவுத்தர்- பொன்குன்னம், திருவாங்கூர்.) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 286-ஆவது ஷரத்து, ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளுக்கு விற்பனை வரி விதிக்கப்படுவதை பாதிக்குமா? அப்படியானால் ஏற்றுமதி செய்யக்கூடிய சரக்கை விற்கும் எல்லா கட்டத்திலுமிருக்கும் வியாபாரிகளுக்கும் அது பொருந்துமா?

பதில்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 286-ஆவது ஆர்டிகிள்படி—இந்தியாவிலிருந்து வெளியே ஏற்றுமதி செய்யப்படும்போது ஏற்படும் விற்பனைக்கு எந்த ராஜ்ய சர்க்காரும் விற்பனை வரி விதிக்க முடியாது என்று இருக்கிறது. கடைசியாகச் செய்யும் விற்பனைதான் 'ஏற்றுமதி விற்பனை' என்று சொல்ல முடியும். இந்த ஒரு கட்டத்தில்தான் விற்பனை வரி கிடையாது. அதற்குமுன் உள்ள விற்பனை கட்டங்களுக்கு இந்த ஷரத்து பொருந்தாது.

81. கேள்வி: விவாகரத்து கோரும் மனுவைத் தாக்கல் செய்ய வேண்டியது டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டிலா, அல்லது ஜட்ஜு கோர்ட்டிலா? மனுதார் ஸ்திரீயாக இருந்தால் அவளுக்குப் பதிலாக குடும்ப சம்ரட்சணை செய்யும் தலைவர் கோர்ட்டில் ஆஜராகலாமா?

பதில்: எந்த இடத்தில் தம்பதிகளின் திருமணம் நடந்ததோ, அல்லது எந்த இடத்தில் எதிர் மனுதார் வசிக்கிறாரோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள சப்கோர்ட், அல்லது ஜில்லா கோர்ட்டில்தான் விவாகரத்து மனுப் போடவேண்டும். அந்த இடம் சென்னைப் பட்டணமாக இருந்தால் சிடி சிவில் கோர்ட்டில்தான் மனுப்போடவேண்டும். மனுப்போடும் ஸ்திரீ, நேரில் கோர்ட்டுக்கு வந்துதான் மனு தாகல் செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. வக்கீல் மூலமாகவோ, பவர் ஏஜண்ட் மூலமாகவோ, (மற்ற சிவில் வழக்குகளைப் போலவே) இம்மனுவையும் தாக்கல் செய்து நடத்தலாம். விசாரணை சமயத்தில் மனுக் கொடுத்த ஸ்திரீ சாட்சி வாக்குமூலம் கொடுக்க வேண்டுமானால், கோர்ட்டில் பகிரங்க விசாரணை நடத்தாமல், தனி அறையில் விசாரிக்கவேண்டுமென்று, கேட்டுக் கொண்டால், நீதிபதி அப்படியே தனி அறையில் இவ்வித வழக்குகளை விசாரணை நடத்தவேண்டுமென்று சமீபத்தில் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. (1951 "வக்கீல்" ஏப்ரல் இதழ்—பக்க 8-பார்க்கவும்.)

82. கேள்வி: (வீரமலை) ஒரு கடையில் வேலை பார்க்கும் சிப்பந்திக்கு ஆறு மாதங்களா

கச் சம்பளம் கொடுக்கப்படாமல் சிப்பந்தி கடையை விட்டு நின்று விட்டால், சம்பளம் கிடைக்க ஷாப் சட்டப்படி யாரிடம் நடவடிக்கை எடுக்கவேண்டும்?

பதில்: சிப்பந்தியின் சாதாரண சம்பளத்தை வசூல் செய்வது பற்றி ஷாப் சட்டத்தில் வியக்தமாய் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகையால், அச் சம்பளத்தை வசூல் செய்ய சிப்பந்தி, சிவில் கோர்ட்டில்தான் தாவா செய்யவேண்டும். ஆனால் ஷாப் சட்டப்படி ஒவ்வொரு சம்பள கெடுவுக்கும் 5 நாட்களுக்குள் ஒரு சிப்பந்தியின் சம்பளத்தை முதலாளி கொடுக்காமலிருப்பது குற்றமாகும் என்பது கவனிக்கத் தக்கது.

83. கேள்வி: (கணேசன்—குலமாணிக்கம்) ஒரு தாவாவில் இருவர்கள் சேர்ந்து கட்சி ஆடினார்கள். பாதியில் ஒருவர் கட்சியில் ஈடுபடாமல் இருந்து விட்டால், கட்சி ஜெயித்த பிறகு சொத்து இருவருக்கும் பாத்தியப்படுமா? கட்சி நடத்தியவர் செலவு தொகைக்காக வற்புறுத்த சட்டம் இடம் தருமா?

பதில்: பாதியில் ஈடுபடாமல் போனாலும், அவருக்கு டிக்ரியால் அளிக்கப்படும் சொத்துக்களை அவர் அடைவார். ஆனால் முழுச் செலவுகளையும் செய்தவர், செலவு செய்யாதவரிடமிருந்த அவர்களுக்குள் செய்தகொண்ட ஏற்பாட்டின்படி வீதாசாரமாகச் செலவு தொகை கேட்கலாம்; அதற்கு தனி தாவாதான் செய்ய வேண்டும்.

84. கேள்வி: (அய்யாத்துரை — சின்னமனூர்) ஷாப் சட்டப்படி ஒரு கடையில் முதலாளியும் அவருடைய பிரிபடாத குடும்பமாயுள்ள அவர் அண்ணன் மகன்களும், சம்பளம் வாங்கும் சிப்பந்திகளும் வேலை பார்த்தால், சம்பளம் வாங்கிவரும் சிப்பந்திகளைப்போல், சம்பளமில்லாத குடும்பத்தினரையும் ரிஜிஸ்டரில் பதிய வேண்டுமா?

பதில்: கடை பிரிபடாத குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்தால், அண்ணன் மகன்களும் முதலாளிகளாவார்கள். இவர்கள் சிப்பந்திகள் அல்ல. ஆகையால் இவர்களை வேலை ரிஜிஸ்டரில் பதியவேண்டியதில்லை.

85. கேள்வி: (ராமராவ் — மன்னார்குடி) ஒரு தொழிலாளி ஒரு வருடத்திற்குக் குறைவாகவே வேலை செய்து தாமே வேலையை விட்டுப் போவதாகச் சொன்னால், அவருக்கு தொழிற்சாலைச் சட்டப்படி 20 நாட்களுக்கு 1 நாள் வீதம் லீவு நாட்களின் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமா?

பதில்: வேண்டாம். குறைந்தது ஒரு வருடம் வேலை செய்தவர்தான் 'பிரிவிலேஜ்' லீவு எடுத்துக் கொள்ள உரிமை உள்ளவராவார். அதற்குப் பிறகும் தாமாக வேலையை விட்டுப் போகின்ற தொழிலாளிக்கு இந்த லீவு நாட்களின் சம்பளம் கொடுக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் இந்த லீவு வேண்டுமென்று தொழிலாளி கேட்டு, அதைக் கொடுக்க முதலாளி மறுத்து, அக்காரணத்தால் தொழிலாளி வேலையை விட்டு விலகினால் மட்டில், இந்த லீவு நாட்களின் சம்பளம் அவருக்கு உண்டு. மேலும், ஒரு தொழிலாளி தர்மாகப் போகாமல், முதலாளியால் வேலையை விட்டு நீக்கப்பட்டால் மட்டில் அத்தொழிலாளி குறைந்தது 4 மாதங்கள் வேலை செய்திருந்தாலும் போதும்; அதற்கு வீதாசாரமான விடுமுறை நாட்களின் சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

86. கேள்வி: (நடராஜன் — திருப்பூர்) சென்னை மாகாணத்திலுள்ள வியாபாரி வெளி மாகாணத்தில் (அங்கே விற்பனை வரி இல்லை) சரக்கு வாங்கி, அவ்விடமே விற்பனை செய்து விட்டால் சென்னையில் விற்பனை வரி கட்ட வேண்டுமா?

பதில்: இதற்கு சென்னை ராஜ்யத்தில் விற்பனை வரி கிடையாத.

87. கேள்வி: (நாராயணராவ் — உசிலம்பட்டி) 1947-ம் வருடத்திய ரைஸ்மில் சட்டம் ரத்து செய்யப்பட்டு 1951-ஆம் வருட சட்டம் அமுலுக்கு வந்துவிட்டதனால், இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்படும் ரைஸ் மில்களுக்கு லைசென்சு தடங்கலின்றி கொடுக்கப்படுமா?

பதில்: 1951-ஆம் வருடத்திய ரைஸ்மில் உத்தரவுப்படிக்கும் 'லைசென்சு' கொடுப்பது கலெக்டருடைய அபிப்பிராயம்தான். மனுப் போட்டவர்களுக்கெல்லாம் 'லைசென்சு' கொடுக்க வேண்டுமென்ற சட்டம் இல்லை.

88. கேள்வி: ஒரு வியாபாரி விற்பனை வரி கட்ட முடியாத நிலைமையில் சர்க்காரால் கேஸ் தொடர்ந்து ஜெயிலுக்குப் போய், விடுதலை அடைந்தபின், மறுபடியும் அது விஷயமாய் சர்க்கார் நடவடிக்கை எடுக்கலாமா? விற்பனை வரி கட்டமுடியாத நிலைமையில் ஒரு வியாபாரி 'இன்சால்வெண்ட்' பெட்டிஷன் கொடுத்து 'டிக்ளேர்' ஆனபிறகு சர்க்கார் அவர் கட்ட வேண்டிய வரிக்காக நடவடிக்கை தொடரலாமா?

பதில்: வரி கொடுக்காத குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போனாலும், அவர் வரி கொடுக்கவேண்டிய கடமை மறைந்து விடாது. மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பிலேயே 'வரிபாக்கி' எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதையும் சர்க்கார் அபராதத்தை வசூல் செய்வதுபோல் நடவடிக்கை எடுத்து வசூல் செய்யலாம். (விற்பனை வரிச் சட்டம், செக்ஷன் 13.) வரி கொடுக்கவேண்டியவர் 'இன்சால்வெண்ட்' ஆனாலும் அவருடைய சொத்துக்களிலிருந்து சர்க்காருக்குக் கொடுக்கப்படவேண்டிய வரி முதலிய தொகைகள் முதலில் பூராவாக வசூல் செய்யப்படும். பாக்கிதான் மற்ற கடன்காரர்களுக்கு வீதாசாரமாகக் கொடுக்கப்படும். (இன்சால்வென்சி சட்டம்—செக்ஷன் 61.) மேலும் வரி கொடுக்காதவர் 'இன்சால்வெண்டா'க ஆக்கப்பட்டாலும் அவர் மீது சர்க்கார் கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் சட்டத்தில் தடை இல்லை.

89. கேள்வி: (மாணிக்கம் செட்டியார் — கீரமங்கலம்) சட்டப்படி எந்த வருடத்தில் ஏற்பட்ட ஒத்தி பாத்தியத்தை கெடு நிபந்தனையன்னியில் மீட்க பாத்தியம் உண்டு?

பதில்: விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி, 30-9-1947-க்கு முன் ஏற்பட்ட ஒத்திகளைத்தான் கெடு நிபந்தனையன்னியில் மீட்கலாம்,

---

7-8-51 ல் திருத்திய ஜெமீன் இனும் ஒழிப்புச் சட்டம்

(சர்வீஸ் இனும் நிலங்களின் மாறுதல்களும் ஆராயப்பட்டது) அணா 8.

தொழிற்சாலை சட்டம் அணா 12.

இனும் நிலங்களிலுள்ள பாத்தியதைகள் ரூ. 1

(எல்லாம் தமிழில்) M. O. செய்து பெறலாம்.

ரங்கநாதன்

16. பாபு நாயக்கன் தெரு, :: கும்பகோணம்.

கண்ட்ரோல்

சில கண்ட்ரோல் உத்தரவுகளை மீறியதாக கிரிமினல் வழக்குத் தொடர கலெக்டருடைய அனுமதி வேண்டும்

கீழேகண்ட கட்டுப்பாடு (கண்ட்ரோல்) உத்தரவுகளை ஒருவர் மீறியதற்காக அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமென்று கலெக்டர் முன் கூட்டியே அனுமதி கொடுத்தாலொழிய, எவர் மீதும் வழக்குத் தொடர முடியாதென்று கீழே கண்ட கட்டுப்பாடு உத்தரவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு புது ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அவையாவன:—

(1) சென்னை உணவு தானியக் கட்டுப்பாடு உத்தரவு. Madras Food grains Control order 1947. (2) சென்னை உணவுதானியங்கள் விலைக் கட்டுப்பாடு உத்தரவு. Madras Food Grains Price Control order 1949. (3) சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவு. Madras Rice Mills Licensing order 1947. (4) சென்னை உணவு தானியக் கொள்முதல் உத்தரவு. Madras Food Grains Procurement order 1947. (5) சென்னை மரவள்ளி போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு. Madras Tapioca Movement Control order 1948. (6) சென்னை பசைமாவுத் தடை உத்தரவு. Madras Flour-use in Paste-Making for Starch-Prohibition order 1947.

ஜில்லா சப்ளை ஆபீசரின் அனுமதி வேண்டும் (நீலகிரி ஜில்லாவில் மட்டில் கலெக்டருடைய அனுமதி வேண்டும்)

கீழே கண்ட கட்டுப்பாடு உத்தரவுகளை ஒருவர் மீறியதாக அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடரவேண்டுமென்று நீலகிரி ஜில்லாவில் கலெக்டரும், மற்ற இடங்களில் ஜில்லா சப்ளை ஆபீசரும் முன் கூட்டியே அனுமதி கொடுத்தாலொழிய எவர் மீதும் வழக்குத் தொடர முடியாதென்றும் கீழ்கண்ட கட்டுப்பாடு உத்தரவுகள்

ஒவ்வொன்றிலும் ஒரு புது ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது:—

(1) சென்னை 'ரேஷனிங்' விசாரணை உத்தரவு. Madras Rationing Enquiry order 1947. (2) சென்னை ஹோட்டல் முதலிய ஸ்தாபனங்களில் சாப்பாடு போடுவதைப் பற்றிய நிபந்தனை உத்தரவு. Madras Food - Restrictions on service of Madras by catering Establishments - order 1947. (3) அத்தியாவசிய பண்டங்கள் அமித சேகரிப்புத் தடை உத்தரவு. Essential Articles Restricted Acquisition order 1947. (4) சென்னை ரேஷனிங் பூர்வாங்க நடவடிக்கை உத்தரவு. Madras Rationing Preparatory Mearures order 1947. (5) சென்னை ரேஷனிங் உத்தரவு. Madras Rationing order 1947.

'ஜில்லா சப்ளை ஆபீசர்' என்பதில் ரேஷனிங் ஆபீசர், உதவி ரேஷனிங் ஆபீசர் இவ்விரண்டு அதிகாரிகளுக்கு மேல் உள்ள அதிகாரியும், சிடி ரேஷனிங் ஆபீசரும் சேர்ந்தவர்களே.

(7—8—1951 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 153—157)

1822

மோட்டார் விதிகள்

பிரயாணிகள் பஸ்ஸில் விட்டுப் போன சாமான்களைப் பற்றி:

சென்னை மோட்டார் விதிகள் (Madras Motor Vehicles Rules) 224-ன் படி ஒவ்வொரு பஸ் கண்டக்டரும் ஒரு 'டிரிப்' முடிந்ததும், வண்டியில் ஏதாவது சாமான்கள் விட்டு வைக்கப் பட்டிருக்கிறதா என்று ஜாக்கிரதையாகப் பார்த்து, அப்படி ஏதாவது சாமான்கள் இருந்து அவைகளை சொந்தக்காரர் கேட்காவிட்டால் உடனேயே, அருகாமையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்புவிக்க வேண்டுமென்று இருக்கிறது. எப்படியும் இவ்வித சாமான்கள் 24 மணிக்குள் போலீசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கண்டக்டர் இல்லாவிட்டால், இவ்விதம் செய்ய வேண்டிய கடமை டிரைவருடையது. இவ்விதியில் இப்பொழுது புதிதாக கீழேகண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது:—

அதாவது சென்னை சிடியில் சர்க்கார் பஸ்களில் இவ்விதம் அகப்படும் சாமான்களை 'டிரான்ஸ்போர்ட்' ஆபீசரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டியதில்லை என்று ஒரு ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது.

[7—8—1951 சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட் பாகம் I பக்கம் 484.]

சென்னை தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் கோர்ட் விதிகள்

1948 ஆம் வருடத்திய தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தை அனுசரித்து சென்னை சர்க்காரால் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் கோர்ட் விதிகள் (1951) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நோய்வாய்ப் பட்டிருக்கும் போதும், தொழிலில் விபத்து ஏற்படும் போதும், ஸ்திரீகளின் மருத்துவச் செலவு ஏற்படும் போதும், தொழில் விபத்தால் மரணமடைந்தவர்களை அண்டியிருந்தவர்களுக்கு உதவி செய்யவும் சர்க்காரால் ஒரு பிரத்தியேக நிதி திரட்டப்படும். இதற்கு முதலாளியும் தொழிலாளியும் பணம் போட்டுக் கொண்டே வரவேண்டும். இந்த நிதியை நிர்வாகம் செய்ய ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்படும். இதில் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க ஒரு தனி கோர்ட் ஸ்தாபிக்கப்படும். இந்தத் தனிக் கோர்ட் ஸ்தாபிப்பதைப்பற்றிய விதிகள் இப்பொழுது சென்னை சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதிகளின்படி இந்த ராஜ்யத்திலுள்ள எந்த சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டின் ஜட்ஜையும் இச் சட்டத்திற்காக 'இன்ஷ்யூரன்ஸ் கோர்ட்' ஆக நியமிக்க சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அவசியமானல் சில முக்கிய வழக்குகளை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய கோர்ட்டையும் தாற்காலிகமாக ஏற்படுத்தலாம். ஒருவர் இச்சட்டப்படி தொழிலாளியா, அவர் இச் சட்டப்படி கட்டணம் கட்டவேண்டுமா, முதலாளி யார், ஒருவர் இச்சட்டப்படிக்குள்ள அனுகூலங்களை அடைய பாத்தியமுள்ளவரா என்பது போன்ற பல பிரச்னைகளை இந்தத் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் கோர்ட்தான் விசாரித்து முடிவுசெய்ய வேண்டும். இக்கோர்ட்டுக்கு மனுக்கள் போடுவது பற்றியும், தீர்ப்புகள் ஏற்படுவது பற்றியும், நிறைவேறுவது பற்றியும் விவரமாய் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

[7—8—1951 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல் சப்ளிமெண்ட், பக்கம் 471]

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor: —V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

PATENT REGISTERED NO. 27878.

ரோலிங் ஸ்டோன்.

தண்ணீரில் ஊரவைத்த தானியங்களைக் கைபடாமல் மாவாக
அரைக்கும் எலெக்டிரிக் கல் உரல்.

ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங்.

சிறந்த சிற்றுண்டி உயர்ந்த உணவு திருப்தியான கவனிப்பு தங்குவதற்கு வசதியான அறைகளுடன் உள்ளது.

புரொப்ரைட்டர்ஸ்:

A. R. வேணுகோபால அய்யங்கார் & சன்.

ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங் & ரோலிங்ஸ்டோன் தயாரிப்பாளர்கள்

மாயவரம் ஜங்ஷன்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி சோப்

தயாரிப்பவர்:—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்.

ஸ்தாபிதம் 1942 — தந்தி "லலிதாலயா"

உயர்ந்த ஆயுர்வேத சிகிச்சைக்கும் மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு

பிராஞ்சு
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு

நரம்பு தளர்ச்சிக்கு "யௌவனஸ்ரீ"

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி.

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் [Regd.]

TRADE MARK

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.
தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம். வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கை கால்வலி, இருமல்களின் உபாதை, நாள்பட்ட பலசிக்கல், இருமல், நெரிக்கட்டி சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0.

வி. பி. பி. செலவு தனி.

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம்:—

ஜெயராம் வைத்தியசாலை

28, காசிவிஸ்வநாதர் கோவில் [illegible]

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்

★

★

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

Fo Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUVUVANAM, TDS.